Synod 2021 2023
For a synodal Church
communion | participation | mission

# வெட்டாப்பு
VETTAPPU
மனிதர் முன் ஒளிர
மாத இதழ்



வைகாசி - 2023 ஆரம்பம் : புரட்டாதி - 14 - 1992 மறைக்கல்வி நடுநிலையம், மட்டக்களப்பு. ஒளி - 31 கதிர் - 04 விலை - 100/=

## சொமஸ்கன் சபைக்கு புதிய குரு





தன்னாமுனை புனித சூசையப்பர் பங்கைச் சேர்ந்தவரும், சொமஸ்கன் துறவற சபையின் நிரந்தர உறுப்பினருமாகிய அருட்சகோதரர் தியாக்கோன் ஜெயராசா வினோஜன் அவர்கள் 30-04-2023 அன்று தன்னாமுனை புனித சூசையப்பர் ஆலயத்தில் மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் மேன்மைமிகு கலாநிதி ஜோசப் பொன்னையா ஆண்டகையினால் குருவாக திருப்பொழிவு செய்யப்பட்டார். இவருடைய பணிவாழ்வு சிறக்க மறைமாவட்டம் சார்பாக வெட்டாப்பு வாழ்த்துகின்றது.

## மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட கல்வி வலயங்களுக்கான க.பொ.த. (சா/த), (உ/த) மாணவர்களுக்கான கருத்தரங்கு



மட்டக்களப்பு





கல்வி அமைச்சும் மதம் மற்றும் விழுமிய கல்வி கிளையால் ஏற்பாடு செய்யப்பட்டு இதற்கு பொறுப்பாளராகவுள்ள அருட்பணி மால் வர்ணஸாந்த அடிகளாரும், அவரது குழுவினரும் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களுக்குட்பட்ட கல்வி வலயங்களுக்குரிய கத்தோலிக்க, கிறிஸ்தவ மாணவர்களுக்கான க.பொ.த (சா/த), க.பொ.த (உ/த) மீட்டல் கருத்தரங்கனை 25-04-2023 அன்று மட்டக்களப்பிலும், 26-04-2023 அன்று கல்முனையிலும் நடாத்தினார்கள். கல்வி அமைச்சும் மதம் மற்றும் விழுமிய கல்வி கிளையும், மட்டக்களப்பு மறைமாவட்ட மறைக்கல்வி நடுநிலைய கத்தோலிக்கக் கல்விப் பிரிவும் இணைந்து இந்நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தது. இது மாணவர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக அமைந்திருந்தது. மட்டக்களப்பு, செங்கலடி மறைக்கோட்டங்களில் 175 கத்தோலிக்க மாணவர்களும், கல்முனை மறைக்கோட்டத்தில் 125 கத்தோலிக்க மாணவர்களும் பங்குபற்றி பயனடைந்தனர். இந்நிகழ்வை ஏற்பாடுசெய்த ஒவ்வொருவருக்கும் கற்பித்த வளவாளர்களுக்கும் இதற்கு உறுதுணையாக இருந்த வலயக்கல்விப் பணிப்பாளர்களுக்கும் உத்தியோகஸ்தர்களுக்கும் எமது நன்றிகள்.

கல்முனை





**ஆண்டவரே என் ஆயன்; எனக்கேதும் குறையில்லை (திபா 23:1)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியரின் எண்ணத்தில்...

என் இனிய வாசக நெஞ்சங்களே!

வைகாசி மாதம் வந்தாலே எம் அனைவரின் நினைவுக்கு வருவது எம் அன்னை மரியாள். திருஅவை வரலாற்றில் தொடக்கம் முதல் இன்று வரை இறைவனின் தாய் மரியா எண்ணற்ற கத்தோலிக்கர்களால் போற்றிக் கொண்டாடப்படுவதை நாம் அறிவோம். அன்னைக்கு எத்தனை விழாக்கள்! எத்தனை பெயர்கள்! அவரது பெயரால் எத்தனை கோயில்கள்!. கத்தோலிக்க கிறிஸ்தவர்கள் மட்டுமல்லாமல் பிற சமய மக்களும் அன்னையின் மீது ஆழமான விதத்தில் பக்தி கொண்டிருப்பதும், அன்னையின் திருத்தலங்களுக்கு செல்வதும், பல்வேறு நேர்ச்சைகளையும், நோன்பு களையும் கடைப்பிடிப்பதும் எல்லோரும் அறிந்த உண்மையாகும். ஏனென்றால் அன்னை மரியாளின் பரிந்துரையால் பலகோடிமக்கள் தம் வாழ்வில் நலன் பெறுகின்றனர். கத்தோலிக்கர்களாகிய எமக்கு அன்னை மரியாள் தாயாக திகழ்கிறாள். இதனால் நமக்கும் அன்னை மரியாவுக்கும் உள்ள உறவு புனிதமானது, ஆழமானது. எனவே கத்தோலிக்கர்களாகிய நாம் அன்னை மரியாவை உதவி செய்யும் கொடையாளராக மட்டும் கருதாமல், பிள்ளைக்குரிய அன்புறவோடு நம் தாயை அண்டிச் செல்வோம். ஒரு குழந்தை தன் தாயிடம் மாறாத அன்பு கொண்டிருப்பது போல் நாமும் அன்னை மரியாவிடம் பாசமும் அன்பும் கொண்டு வாழ்வோம்.

இம்மாதம் முழுவதும் அன்னை மரியாவிடம் எம் நாட்டை ஒப்புக்கொடுத்து மன்றாடுவோம். வளர்ச்சியும் வீழ்ச்சியும் தான் வாழ்க்கை, ஏற்றமும், தாழ்வும் தான் வாழ்க்கை, மகிழ்ச்சியும் துக்கமும் தான் வாழ்க்கை, மாற்றங்கள், முன்னேற்றங்கள், பிரச்சனைகள், போராட்டங்கள் இவைகள் வேறு வேறு உருவங்களாக நம்மைச் சந்திக்கின்றன. எம் நாட்டில் ஒரு புறம், தங்கள் கட்சி பலத்தை நிரூபிக்க முயலும் தேர்தல், மற்றொரு புறம் விவசாயிகள் போராட்டம், மீனவர்கள் வாழ்வோடு தொடர்புடைய தொடர்போராட்டம், ஒருபுறம் கலவரங்கள், வன்முறைகள். மற்றொரு புறம் புதிய புதிய சட்டங்களைக் கொண்டு வந்து எமது நாட்டு மக்களின் வாழ்க்கையை சூறையாடும் கும்பல்கள் அதிகரிப்பு. மெல்ல மெல்ல நாட்டை பலம் வாய்ந்த நாடுகளுக்கு விலை பேசும் சந்தர்ப்பவாத அரசியல்வாதிகள் பெருகி வருகின்றனர். இந்நிலையில், எம் அன்னை எங்களுக்காக தன் மகன் இயேசுவிடம் பரிந்து பேச வேண்டுவோம். கானாவூர் திருமணத்தில் பிறரதுதேவைகளை அறிந்து செயற்படத் துடித்த அன்னை மரியாள் எம்மையும் அவளைப் போல் நம் நாட்டிலும் சூழலிலும், எங்கும் எல்லோருக்கும் நன்மை செய்து வாழ பல்வேறு வழிகளில் நமக்கு உதவியாக இருக்க வேண்டுவோம்.

நாமும் அன்னை மரியாளின் பிள்ளைகள் என்று சொல்வதில் பெருமை கொள்வதில் மட்டும் நிறுத்தி விடாமல் அவளைப் போல் எளிய வாழ்வு தூய்மை, பணிவு, இறையன்பு, பிறரன்பு, சேவை மனப்பான்மை, பிறர் தேவையறிந்து உணர்ந்து உதவுதல், எவருக்கும் தீங்கு செய்யாதிருத்தல் போன்ற அன்னை மரியாளின் வாழ்க்கை முறைகளை நமதாக்குவோம். அன்னையின் அன்பு மக்கள் என்று அகமகிழ்ந்து அக்களிப்போம். வைகாசி மாத பாப்பரசரின் வேண்டுதலானது சித்திரவதை செய்வதை நிறுத்துமாறு வேண்டுவதோடு உலகளாவிய ரீதியில் இதை நிறுத்தவும், பாதிக்கப்பட்டவர்களுக்கும் பாதுகாப்பும் உதவியும் செய்ய வேண்டும் என்று மன்றாடுவோம்.

~ இறையாசீருடன், *அருட்பணி ஜீரோன் த லிமா*

## தொடர்புகளுக்கு...

**மின் அஞ்சல (e-mail):**
cvetcentre@gmail.com

**தொலைபேசி இலக்கம் :**
065 222 2485

# தொடர்பு ஊடகங்களும் இளைஞர்களும்



தங்கள் வாழ்நாளில் பெரும் பகுதியைத் தொடர்புகளுக்காகவும், தொலைக்காட்சிக்காகவும் அர்ப்பணித்துவிட்ட இளைஞர்கள் தற்போது மகிழ்ச்சியின் உச்சத்தில் மிதக்கிறார்கள் என்றால் அது மிகையாகாது. ஏனென்றால் அவர்களின் வீடுகளில் உள்ள ரிமோட்டில் உள்ள எண்களின்'எண்ணிக்கையைவிட அதிகமான சேனல்கள் இன்றைக்கு உள்ளன. ஒரே சேனல், ஒரே புரோகிராம் என்றில்லாமல் சேனல் விட்டு சேனல் சலிப்படையாமல் பார்க்கிறார்கள். இளைஞர்களின் பொழுது போக்குப் பசிக்கு உணவளிக்கும் வகையில் சேனல்களும் வலையப் பின்னல்களும், பத்திரிகைகளும், திரைப்படங்களும் நான், நீ எனப் போட்டிப் போட்டுக் கொண்டு இருக்கின்றன.



### தொடர்பு ஊடகங்கள் எதற்காக?:

காலத்தின் அவசியமாகப் புகுந்துள்ள தொடர்பு ஊடகங்கள் எழுத்து காட்சி ஒளி, ஒலி ஊடகங்கள் அனைத்துமே பின்வரும் நோக்கத்திற்காக உள்ளதாக அறிஞர்கள் கூறுகின்றனர். அனைத்துமே உறவாடவும், தான் வாழும் உலகத்தைப் புரிந்து கொள்ளவும், தன்னை வளர்த்துக் கொள்ளவும் வேண்டிய நோக்கில் செயற்பட வேண்டும் என்றும் கூறுகின்றனர். இதனை அறிவுப் பூர்வமாக ஆராயவேண்டிய கால கட்டத்தில் நாம் உள்ளோம்.

விவிலிய கண்ணோட்டத்தில் விவிலியப் பக்கங்களைப் புரட்டிப் பார்த்தால் இயேசு சமூகத் தொடர்புகளுக்கு ஒரு மிகச் சிறந்த மாதிரி என்பதனை அறியலாம். சமூகத் தொடர்பின் நோக்கங்களை அறிந்தவராகவும் சமூகப் பொறுப்பு மிக்க ஒரு நபராகவும், உறவுகளை வளப்படுத்துபவராகவும், மக்கள் மொழியைப் பேசுபவராகவும், காலத்திற்கும், சூழலுக்கும், மரபுக்கும், மண்ணிற்கும் ஏற்ற தொடர்பியல் உத்திகளைக் கையாள்பவராகவும், தொடர்பியலுக்கு புதிய பரிமாணங்களை அளிப்பவராகவும் பார்ப்பதை அறியலாம்.

இயேசு சமூகப் பொறுப்புள்ளவராக இருந்ததால் தான் இறையரசு என்ற மாற்றுச் சமூக சிந்தனை எழுந்தது. உறவை வளர்க்கப் புற - இஸ்ராயேல் இனத்தை ஒன்றிணைக்கத் தொடர்பாளரானார். ஆதிக்கப் பண்பாட்டை, மொழியைத் திணித்து மக்கள் மொழியை, கலையை அந்நியமாக்காமல் பாமர மக்களின் அநீதிகளை விமர்சனத்துடன் தட்டிக் கேட்கின்ற சிறந்த தொடர்பாளராக இயேசுவைக் காண்கின்றோம்.

எதிர்ப்புக்கள் வந்தாலும் இயேசு பின் வாங்கவில்லை. இளமை ஓர் இனிய பருவம், இந்தப் பருவத்தை யாருக்காகவும், எதற்காகவும் இழந்துவிடக்கூடாது. இளைஞனுக்குப் பிடிமானம் இருந்தால் அவனுக்குள் யாரும் எதையும் திணித்துவிட முடியாது. விழிப்புத் தோன்றி விட்டால் வெற்றி நிச்சயம். இளைய சமூகம் இனியாவது சமூகப் பொறுப்பினை வளர்க்கும் உறவினை வலுப்படுத்தும், மக்கள் மொழிகளை கையாளும், அடித்தள மக்களை மையப்படுத்தும், இழிவுகளை விமர்சனம் செய்யும் வாழ்வையே செய்தியாகக் காட்டும் தொடர்பு ஊடகங்களை மட்டுமே கையில் எடுக்க வேண்டும். முன்னிலைப்படுத்த வேண்டும். இதற்கு இளையோர் பணியாளர்கள் உதவிட வேண்டும். இதைத்தான் திருஅவை விரும்புகிறது, வரவேற்கிறது.

*(தொடரும்...)*

*-அருட்சகோதரி சலோமி மொறாயஸ்*

## நடுநிலைய செயற்பாடுகள் - 2023

| வைகாசி | ஆனி |
|---|---|
| 06 - மறையாசிரியர் கூட்டம் - அம்பாறை | 03 - A/L கருத்தரங்கு (2023) |
| 13 - புதிய நற்கருணைப் பணியாளர் பயிற்சி | 10 - கத்தோலிக்க ஆசிரியர் - மட் |
| 20 - மறையாசிரியர் ஒன்றுகூடல்/ பாடத்திட்டம் - செங்கலடி | 17 - மறையாசிரியர் மீட்டல் வகுப்பு - செங்கலடி |
| 20 - A/L கருத்தரங்கு (2023) | 17 - புதிய நற்கருணைப் பணியாளர் பயிற்சி |
| 27 - மறையாசிரியர் ஒன்றுகூடல்/ பாடத்திட்டம் - மட், கல்முனை | 24 - மறையாசிரியர் மீட்டல் வகுப்பு - மட்/கல் |
| 28 - புதிய நற்கருணைப் பணியாளர் பயிற்சி | 25 - புதிய நற்கருணைப் பணியாளர் பயிற்சி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரியன்னை இறைவனின் தாய்



மரியன்னை இறைவனின் தாய் என்று கூறி தை மாதம் 1ம் திகதி இறைவனின் தாய்க்கு விழா எடுக்கிறோம். அன்னை மரியாவை இறைவனின் தாய் என முதலில் குறிப்பிட்டவர் எலிசபெத்தம்மாள் (லூக் 1:43). தாயின்றி எவரும் தனியே பிறப்பதில்லை. "அம்மா என்றழைக்காத உயிரில்லையே அம்மாவை வணங்காமல் உயர்வில்லையே" இந்த உலகில் எத்தனை பந்தங்கள் சூழ்ந்தாலும் தாயின் பந்தம்தான் வாழ்க்கையின் அச்சாணி. இதனைத் தெளிவுபடுத்தத்தான் புனித அகுஸ்தினார் ஆழமாக நமக்குச் சொல்லிச் சென்றார். மனிதனுடைய உறுப்புக்கள் அனைத்தும் நாவாக மாறினாலும் கன்னி மரியாவைப் போற்றப் போதாது என்றார். இறைவனின் தாய் நம் எல்லார்க்கும் தாய்.

**தாழ்ச்சி மரியன்னையின் முதன்மையான பண்பு:**

தாழ்ச்சியுள்ள மனிதர்கள் வீழ்வதில்லை. நல்ல முயற்சிகளை செயலாக்குகின்ற போதும் உண்மையில் வாழ்கின்ற போதும் ஏற்படும் சோதனைகள் தொல்லைகள், துன்பங்கள், அவமானங்கள், தடைகள் இவற்றைச் சந்திக்க நேரிடும்போதும் அவைகளை ஏற்றுக்கொள்ளும் மனப்பாங்கு உடையோர்தான் தாழ்ச்சி உள்ளம் கொண்டோராவார். "நெருப்பில் பொன் புடமிடப் படுகிறது, ஏற்புடைய மனிதர் மானக்கேடு என்னும் உலையில் சோதித்துப் பார்க்கப்படுகின்றனர்" (சீஞா 2:5). கன்னி மரியாவுக்கு வானதூதர் தோன்றி "அருள்மிகப் பெற்றவரே வாழ்க! ஆண்டவர் உம்மோடு இருக்கிறார் (லூக் 1:28) என்றார். இவ்வார்த்தைகள் நிறைவேற அவர் அடைந்த துன்பங்கள் சொல்லில் அடங்கா. தாழ்ச்சியின் சின்னம் அன்னை மரியாள்.

**தாழ்ச்சியோடு இறை சித்தத்திற்கு பதில் கூறிய அன்னை மரியாள்:**


இதோ கருவுற்று ஒரு மகனைப் பெறுவீர், அவருக்கு இயேசு என்னும் பெயரிடுவீர். அவர் உன்னத கடவுளின் மகன் எனப்படுவார் (லூக் 1:31-32) அதற்கு மரியா கேள்விக் கணையைத் தொடுகிறாள். "இது எப்படி நிகழும்? நான் கன்னி ஆயிற்றே" (லூக் 1:34) வானதூதரின் தெளிவான உரையைக் கேட்டு தெளிவான மரியா, இச்சமூதாயத்தின் பின்விளைவுகளையும், துச்சமென மதித்து, "நான் ஆண்டவரின் அடிமை, உம் சொற்படியே நிகழட்டும்" (லூக் 1:38) என்று தாழ்ச்சியோடு பதில் கூறி தன்னையே இழக்க தயாரானார். கன்னி கர்ப்பம் தரித்திருக்கிறாள் என்றால் அன்றைய சமூதாயம் எவ்வளவு கேவலமாகப் பேசியிருக்கக் கூடும். ஆனால் மரியா நான் கடவுளைப் பெற்றெடுக்கப்போகிறேன் என்ற மனித நம்பிக்கைக்கு அப்பாற்பட்டு ஊராரின் ஏச்சுப் பேச்சுக்களை ஏற்க தயாராகி அனைத் தையும் தன் உள்ளத்தில் இருத்தி சிந்திக்கும் பக்குவம் பெற்றார். அப்படிப்பட்டவர்தான் இறைவனின் தாய். இதனால்தான் அவர் நம் எல்லோர்க்கும் தாய்.

கானாவில் திருமணம் இயேசுவின் தாய் அங்கு இருந்தார். இயேசு திருமுழுக்குப் பெற்ற பின் தன் சொந்த ஊர் செல்லவில்லை. கானாவின் திருமணத்திற்கு தன் தாயும் வருவார். அங்கு அவரை காணலாம் என்ற எண்ணம் மேலோங்க அழைப்பின் பேரில் தம் சீடர்களுடன் கானாவூர் சென்றிருந்தார். தன் தாயைக் கண்டார். மகனைக் கண்ட மரியாவின் விழிகளின் ஓரம் கசிந்தன. திருமண விழாவிற்கு அதிகமான நபர்கள் வந்ததால் திராட்சை இரசம் தீர்ந்துபோகவே இயேசுவின் தாய் அவரை நோக்கி "இரசம் தீர்ந்து விட்டது" என்றார். இயேசு அவரிடம் "அம்மா இதைப் பற்றி நாம் என்ன செய்ய முடியும்? எனது நேரம் இன்னும் வரவில்லையே" என்றார் (யோவா 2:3-4). இறைவனின் தாய் இங்கே நேரத்தை உருவாக்குகிறார். தன் மகனால் எல்லாம் முடியும் என்ற நம்பிக்கையில் "அவர் உங்களுக்குச் சொல்வதை எல்லாம் செய்யுங்கள்" என்றார் (யோவா 2:5). இயேசுவும் தாய் சொல்லைத் தட்டாமல் தண்ணீரை இரசமாக்கியதுதான் இயேசு செய்த முதல் அருங்குறி. இச்செயலின் மூலம் அவர் தச்சன் மகன் அல்ல கடவுளின் மகன் என்று உலகிற்கு அறிமுகப்படுத்த காரணியாக அமைகிறார் இறைவனின் தாய் மரியாள்.

நாம் வாழ்க்கை என்னும் கப்பலில் பயணம் செய்கிறோம். தீயோன் என்னும் அலையால் அலைக்கழிக்கப்படும் போது மரியாள் நமக்கு வழிகாட்டும் விண்மீனாக திகழ்வார். அன்னை வாழ்ந்து காட்டிய தாழ்ச்சியிலும், அயலானை அன்பு செய்வதிலும் நம் பயணம் அமைந்தால் வாழ்வில் எப்பொழுதும் மணநிறைவு குடி கொள்ளும். வாழ்வில் மாற்றம் இல்லையேல் ஏற்றமில்லை. இறைவனோடு இணைவதற்கு சமுதாயத்தில் பிறருக்கு உதவியாளனாக வாழ புதிய இதயத்தை கேட்போம். "நான் உங்களுக்குப் புதிய இதயத்தை அருள்வேன். புதிய ஆவியை உங்களுள் புகுத்துவேன். உங்கள் உடலிலிருந்து கல்லான இதயத்தை எடுத்துவிட்டு அன்பும் இரக்கமும் நிறைந்த சதையிலான இதயத்தை பொருத்துவேன்" என்கிறார் ஆண்டவர் (எசே 36:26) புதிய இதயத்தைப் பெற்று, புதிய ஆற்றலோடு இறைவார்த்தையை வாழ்வாக்குவோம்.

## மட்டக்களப்பு பிராந்திய கிறிஸ்தவ வாழவுச் சமூகத்தினரின் தவக்கால தியானம்

மேற்படி கி.வா.சமூகத்தினரால் கடந்த தபசுகால ஞானஒடுக்கமானது மார்ச் மாதம் 18ம் திகதி புனித இஞ்ஞாசியார் ஆலயத்தில் அருட்பணி அனிஸ்டன் மொறாயஸ் அடிகளாரின் வழிகாட்டலில் நடந்தேறியது. இதில் மட்டக்களப்பு பிராந்திய கி.வா.ச. அங்கத்தவர்கள் 45 பேர் பங்குபற்றினர். இது ஒரு முழுநாள் தியானமாக நடாத்தப்பட்டது.







## மட்டக்களப்பு பிராந்திய கிறிஸ்தவ வாழவுச் சமூகத்தினரின் பிராந்திய தேர்தல்

2023 - 2025 வரையிலான எமது மட். பிராந்திய புதிய அங்கத்தவர் தெரிவானது அருட்பணி அனிஸ்டன் மொறாயஸ் அடிகளாரின் வழிகாட்டலின் கீழ் புளியடிக்குடா பங்கின் மேயர் மண்டபத்தில் கடந்த 22-04-2023 அன்று ஒருநாள் நிகழ்வாக நடந்தேறியது. இதில் மட்டக்களப்பு பிராந்தியத்தில் இயங்கி வரும் 7 பங்கு கி.வா.சமூகக் குழுக்கள் பங்கு பற்றினர். இக்குழுக்களில் இருந்து "open space Peychology" முறையில் எதிர்வரும் ஆண்டிற்கான அங்கத்தவர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

-கி.வா.சமூகம், மட்டக்களப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டவர் நல்லவர் நேர்மையுள்ளவர் (திபா 25:8)

## இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் சாரம்

-நன்றி - தீபகம்

சங்க ஏடுகளின் சுருக்கம் கேள்வி - பதில்களில்...

### திருஅவையின் நற்செய்திப்பணி

(விதித் தொகுப்பு)

**ஆயர்கள் திருப்பணியாளர்களிடம் கொள்ள வேண்டிய உறவுப் பற்றிச் சங்கம் கூறுவன யாவை?**

தம் திருப்பணியில் திருப்பணியாளர்களை உதவியாளராகவும், ஆலோசகராகவும், சகோதரர்களாகவும், நண்பர்களாகவும் ஏற்க வேண்டும். அவர்களின் உலக மற்றும் அருள்வாழ்வு நலனில் கருத்தாய் இருக்க வேண்டும். அவர்கள் தூய வாழ்வு வாழத் துணை நிற்க வேண்டும். அவர்களின் தொடர்ப்பயிற்சியில் கவனம் செலுத்த வேண்டும். அவர்களுக்குச் செவிமடுத்து, உரையாடி, திருப்பணியாளர் மன்றத்தை ஏற்படுத்த வேண்டும்.

**திருப்பணியாளர்கள் தம் ஆயர்களுடன் கொள்ள வேண்டிய உறவுப்பற்றி சங்கம் கூறுவன யாவை?**

கிறிஸ்துவின் அதிகாரத்தை ஆயரில் கண்டு மதித்தல், அவருக்கு அன்புடன் கீழ்ப்படிந்து அவரைச் சார்ந்து திருத்தூதுப் பணிகளில் ஒன்றித்திருத்தல், அவரின் வழிகாட்டுதலுக்கு இணங்குதல், திருவழிபாட்டில் குறிப்பாக, நற்கருணைக் கொண்டாட்டத்தில் ஆயரோடுத் தமக்குள்ள ஒன்றிப்பை வெளிப்படுத்தல்.

**பிறத் திருப்பணியாளர்களுடன் ஒத்துழைக்கும் போது கவனத்தில் கொள்ள வேண்டுவன யாவை?**

திருஅவைக்காக மறைமாவட்ட மற்றும் துறவறத் திருப்பணியாளர்கள் ஒன்றுபட்டு உழைத்தல், இவர்கள் திருத்தூதுப் பணி, அன்பு, இறைவேண்டல் மற்றும் சகோதரத்துவத்தால் ஒன்றிணைதல், இன்னல்களால் துன்புறும் திருப்பணியாளர்கள் மட்டில் அக்கறைக் கொள்ளுதல், தவறும் திருப்பணியாளரிடம் சகோதர அன்புடன் பழகி அவர்களுக்காக மன்றாடுதல்.

**வயது முதிர்ந்த மற்றும் இளையத் திருப்பணியாளர்களுக்கிடையே நிலவ வேண்டிய உறவுமுறை யாது?**

வயது முதிர்ந்தத் திருப்பணியாளர்கள்: இளையத் திருப்பணியாளரைத் தம் சகோதரராக ஏற்று, அவர்களைப் புரிந்துக்கொண்டு, அவர்களின் பணிகளில் உதவி அவர்களுக்கு ஊக்கமளிக்க வேண்டும்.

இளையத் திருப்பணியாளர்கள்: வயது முதிர்ந்தத் திருப்பணியாளர்களின் வயதையும் அனுபவத்தையும் மதித்து அருள்வாழ்வுத் தொடர்பானச் செயல்பாடுகளில் அவர்களைக் கலந்தாலோசிக்க வேண்டும்.

**திருப்பணியாளர்கள் தம் பணி வாழ்வில் கொண்டிருக்க வேண்டியப் பண்புகள் யாவை?**

சகோதர உணர்வு, விருந்தோம்பல், நற்செயல்கள் புரிதல், பகிர்வு மனப்பான்மை, பரிவிரக்கம் ஆகியன.

**திருப்பணியாளர்களின் கூட்டு வாழ்வுப் பற்றிச் சங்கம் கூறுவன யாவை?**

அருள்வாழ்விலும் அறிவுத்துறையிலும் உதவிப் பெற்றுக்கொள்ளவும், தம் பணியில் ஒத்துழைப்புப் பெறவும், தனிமைக் காரணமாக வரும் ஆபத்துக்களைத் தவிர்க்கவும், திருப்பணியாளர்களுக்குள் கூட்டு வாழ்வு வளர ஊக்கம் அளிக்கப்படுகிறது. இதன்படி எங்கு முடியுமோ அங்குச் சேர்ந்து வாழ, ஒன்றாக உணவருந்த, அடிக்கடி ஒன்று கூட வாய்ப்புண்டு

**பொதுநிலையினர் மட்டில் திருப்பணியாளர்களின் பங்கு யாது?**

திருப்பணியாளர்கள் பொதுநிலையினருடன் ஒன்றுபட்டு தம் பணிகளை நிறைவேற்றல், அவர்களின் மாண்பையும், அருள்வாழ்வையும் மதித்து அவர்களின் ஆலோசனைகளுக்குச் செவிமடுத்தல், அவர்கள் மீது நம்பிக்கைக் கொண்டுத் திருப்பணி சார்ந்தப் பொறுப்புகளை ஒப்படைத்தல், அவர்களுடன் நல்லுறவை ஏற்படுத்தல், வேறுபட்ட மனப்பான்மைக் கொண்டவரையும் நம்பிக்கையைக் கைவிட்டவரையும் தேடிச் சென்று ஒன்றுபடுத்தல்.

**திருப்பணியாளர்கள் அனைத்துலக திருஅவையின் மட்டில் அக்கறை கொள்ள வேண்டியதன் அவசியம் யாது?**

கிறிஸ்துவின் திருப்பணி நிலையில் அவர்கள் பங்கு கொள்வதால், எல்லாமக்களையும் இன, மொழி வேறுபாடின்றிக் காக்க வேண்டும். எல்லாச்சபைகள் பற்றியும் அவர்கள் கவலை உள்ளவர்களாக இருக்க வேண்டும். திருப்பணியாளர்கள் பற்றாக்குறையுள்ள மறைமாவட்டங்கள் நாடுகளில் பணியாற்றத் தாங்களாகவே விருப்பமுடன் முன்வர வேண்டும்.

**புதிய நாடுகளுக்குத் திருப்பணியாளர்களை அனுப்புவது பற்றித் திருச்சங்கம் கூறுவன யாவை?**

புதிய நாட்டின் மொழி, பழக்க வழக்கம் தெரியாதிருந்தால், தனியாக அனுப்பாமல் இருவர் அல்லது மூவராக அனுப்ப வேண்டும். அவர்களின் அருள்வாழ்வு, உடல்நலம் பற்றிக் கவனம் செலுத்த வேண்டும். பணிபுரியும் இடம் மற்றும் சூழல்கள் அவர்களின் நிலைமைக்கு ஏற்றனவாய் இருக்க வேண்டும். புதிய நாட்டின் மொழியையும், அந்நாட்டு மக்களின் உள, சமூகப் பண்பையும் அறிதல் வேண்டும்.

-(தொடரும்...)

## மறைக்கல்வி கற்போம்

-நன்றி - மறைக்கல்விச் சுருக்கம்

### இறைவேண்டல் மரபு

*அதிகாரம் இரண்டு*

**மரபில் இறைவேண்டல் பெறும் முக்கியத்துவம் என்ன?**

இறைமக்கள் எவ்வாறு இறைவேண்டல் செய்ய வேண்டுமெனத் தூய ஆவியார் திருஅவையின் உயிருள்ள மரபு வழியாகக் கற்றுக்கொடுக்கின்றார். உள் உணர்வுகளை இயல்பாக வெளிக்கொணர்வது மட்டுமே இறைவேண்டல் ஆகாது. மாறாக, ஆழ்நிலைத் தியானம், மறைநூல் வாசிப்பு, ஆன்மீக உண்மைகளை ஆய்ந்தறிதல் ஆகியவையும் இறைவேண்டலே.

#### இறைவேண்டலின் ஊற்று

**கிறிஸ்தவ இறைவேண்டலின் ஊற்றுகள் யாவை?**

கிறிஸ்தவ இறைவேண்டலின் ஊற்றுகள்:

- இறைவார்த்தை: இது கிறிஸ்துவைப் பற்றிய "ஒப்பற்ற அறிவை" (பிலி 3:8) நமக்குத் தருகிறது.
- திருஅவையின் திருவழிபாடு: இது மீட்பின் மறை உண்மைகளைப் பறைசாற்றி, நிகழ்த்திக்காட்டி, அதனோடு நம்மை இணைக்கிறது.
- அருள்வாழ்வு சார்ந்த நற்பண்புகள்: அன்றாட சூழல்கள்: இவற்றில் நாம் கடவுளைச் சந்திக்கிறோம்.

"ஆண்டவரே, நான் உம்மை அன்பு செய்கிறேன், உம்மை என்றென்றும் அன்பு செய்ய வேண்டமென்னும் அருளை மட்டுமே கேட்கிறேன்... என் இறைவா, நான் உம்மை அன்பு செய்கிறேன் என்பதை ஒவ்வொரு நொடியும் என் நா எடுத்துரைக்க முடியாமல் போனால் நான் எத்தனை முறை மூச்சு விடுகிறேனோ அத்தனை முறையும் என் இதயம் சொல்ல வேண்டுமென விரும்புகிறேன்" (புனித ஜான் மரிய வியான்னி).

#### இறைவேண்டல் செய்யும் முறை

**பல்வேறு இறைவேண்டல் முறைகள் திருஅவையில் உள்ளனவா?**

பல்வேறு வரலாற்று, சமூக, பண்பாட்டுச் சூழல்களுக்கு ஏற்பத் திருஅவையில் பல்வேறு இறைவேண்டல் முறைகள் உள்ளன. திருத்தூதர்களின் நம்பிக்கை மரபுக்கு இறைவேண்டலின் இந்த முறைகள் ஏற்றவையாக அமைந்துள்ளனவா என்று தேர்ந்து தெளியும் கடமை திருஅவையின் திருஆசிரியத்தைச் சார்ந்தது. இயேசு கிறிஸ்துவோடு எப்பொழுதும் தொடர்பு கொண்டுள்ள இறைவேண்டலின் உண்மைகளை விளக்குவது அருள்பணியாளர்கள், வேதியர்கள் ஆகியோரின் கடமையாகும்.

**யார் வழியாக நாம் இறைவேண்டல் செய்கிறோம்?**

கிறிஸ்து வழியாகவே நாம் இறைவேண்டல் செய்கிறோம். வெளிப்படையாகவோ மறைமுகமாகவோ இயேசுவின் பெயரால் நாம் செய்யும் இறைவேண்டலே இறைத் தந்தையைச் சென்றடைகிறது. இயேசுவின் மனிதத் தன்மை வழியாக மட்டுமே இறைத்தந்தயிடம் வேண்டல் செய்யத் தூய ஆவியார் நமக்குக் கற்றுத் தருகிறார். இதனால்தான் திருவழிபாட்டு செபங்கள் "எங்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் வழியாக" எனும் வாய்ப்பாட்டோடு நிறைவடைகின்றன.

**இறைவேண்டலில் தூய ஆவியாரின் செயல்பாடு என்ன?**

கிறிஸ்தவ இறைவேண்டலின் உள்ளார்ந்த ஆசிரியர் தூய ஆவியாரே, மேலும் "எதற்காக, எப்படி நாம் இறைவனிடம் வேண்டுவது என்று நமக்குத் தெரியாது" (உரோ 8:26). எனவே ஒவ்வொரு சூழலிலும் "தூய ஆவியாரே, எழுந்தருளி வாரும்" என அவரிடம் இரந்து மன்றாடுமாறு திருஅவை நம்மை ஆர்வமாகத் தூண்டுகிறது.

**கிறிஸ்தவ இறைவேண்டல் எவ்வாறு மரியாவின் இறைவேண்டலாக உள்ளது?**

மரியா தூய ஆவியாரின் செயல்பாட்டோடு தன்னிகரற்ற முறையில் ஒத்துழைத்த காரணத்தால் திருஅவை மரியாவிடமும் மரியாவோடும் செபிக்க விரும்புகிறது. மரியா இறைவேண்டலுக்கு சிறந்த எடுத்துக்காட்டு. இதனால் அவரோடு சேர்ந்து ஆண்டவரைப் "போற்றவும்" அவரிடம் "வேண்டவும்" விரும்புகிறது. இதன் பயனாக, மரியா நமக்கு வழியைக் காட்டுகிறார். அந்த வழி ஒரே இடைநிலையாளரான அவருடைய மகனே.

**திருஅவை எவ்வாறு மரியாவிடம் மன்றாடுகிறது?**

"அருள்மிகப் பெற்ற மரியே" எனும் மன்றாட்டு வழியாக, கன்னி மரியாவின் பரிந்துரையைத் திருஅவை வேண்டுகிறது. இது தவிர "செபமாலை", விண்ணப்ப செபங்கள், கிறிஸ்தவ மரபு சார்ந்த பல்வேறு புகழ்பாக்கள், பாடல்கள் முதலியவை மரியாவை நோக்கி எழுப்பும் மன்றாட்டுகள் ஆகும்.

#### இறைவேண்டல் வழிகாட்டிகள்:

**நாம் இறைவேண்டல் செய்ய புனிதர்கள் எவ்வாறு வழிகாட்டிகளாக உள்ளார்கள்?**

இறைவேண்டல் செய்ய புனிதர்கள் நமக்கு எடுத்துக்காட்டுகளாய் உள்ளனர். நமக்காகவும் அனைத்துலகிற்காகவும் தூய மூவொரு கடவுள் முன்னிலையில் பரிந்துரைக்குமாறு அவர்களிடம் நாம் மன்றாடுகிறோம். அவர்களின் பரிந்துரை இறைத் திட்டத்திற்கு அவர்கள் வழங்கும் மிக மேலான பணி ஆகும். புனிதர்களின் சமூக உறவில், திருஅவையின் வரலாறு முழுவதிலும், பல்வேறு ஆன்மிகங்களின் வகைகள் தோன்றியுள்ளன. நாம் எவ்வாறு வாழ வேண்டும் என்றும், எவ்வகையில் இறைவேண்டல் செய்ய வேண்டும் என்றும் அவை நமக்குக் கற்றுத் தருகின்றன.

-(தொடரும்...)

**செய்த பாவத்தையே மீண்டும் செய்யாதே (சீரா 7:8)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

J. அமலி அக்கா

# சிறுவர் பக்கம்

## முயற்சி திருவினை ஆக்கும் முயற்றுஇன்மை இன்மை புகுத்தி விடும் - (குறள் 616)

பிள்ளைகளே!

காலங்கள் கடந்து கொண்டே செல்கின்றது. இவ்வாறான சூழ்நிலையில் எமது ஆயுள் காலத்தின் துரித வேகப் பந்தயத்தில் நாம் வெற்றிபெற வேண்டும். அப்படி வெற்றிபெற வேண்டுமென்றால் எம்மில் தூய வாழ்வு குறித்த எதிர்நோக்கு இருக்க வேண்டும். அந்த எதிர்நோக்கானது எமது வாழ்நாளிலே எம்மை தூய மனதுடையோராய் நேரிய வாழ்வு வாழத் தூண்ட வேண்டும். இதை சிறுவர் நாம் சிறுவயதிலிருந்தே எமது இலட்சிய விருதுவாக்காக எம்முன் பதித்து, தூய வாழ்வுக்கான முயற்சியுடையோராய் மாற வேண்டும். சிறுவர்தானே எம்மால் எதுவுமே முடியாது. பெரியவர்களும் எதுவும் சொல்ல மாட்டார்கள். நாம் எப்படியும் நடந்து கொள்ளலாம் என்று அசட்டைத்தனத்தை வளர்த்துக்கொள்ளக் கூடாது. நாளைய சமூகத்தை உருவாக்கும் உயரிய பொறுப்பும் எம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. என்னால் முடியாது என்ற நினைக்காது முயற்சித்தால் வெற்றி கிடைக்கும் என்பதைச் சுட்டிக்காட்டும் கதையொன்று படிப்போம்.

ஒரு பெரிய விபத்தில் தனது இடது கையை இழந்துவிட்ட சிறுவன்தான் யூட். ஜூடோ பயில விருப்பம் கொண்ட அவனது கனவுக் கோட்டையில் கல் விழுந்த நிலைதான் அந்த விபத்து. ஆனால் கலங்கிவிடவில்லை. இறைவனையும் அவனது குறிக்கோலையும் முன்னிறுத்தி ஜூடோ குரு ஒருவரைச் சந்தித்தான். அந்தக் குருவும் அவனது குறையைப் பார்க்காது அவனது முயற்சியையும், குறிக்கோலையும் கருத்தில் கொண்டு தனது மாணவனாகச் சேர்த்துக் கொண்டார். யூட்டைக் கண்ட ஏனைய மாணவர்கள் ஏளனமாகப் பார்த்தார்கள். "ஒத்தக் கையன் குத்தப் போறான்" என்று கேலியும் செய்தார்கள். குரு யூட்டிற்கு ஒரேயொரு குத்துவித்தையை மட்டுமே சொல்லிக் கொடுத்தார். அவனும் சலித்துக்கொள்ளாமல் அனுதினமும் அதை மட்டுமே பயிற்சி செய்தான். சில மாதங்கள் ஓடி மறைந்தது. அப்போதும் அதே குத்துப் பயிற்சிதான். இப்போது யூட் சற்று சிந்தித்தவனாகக் குருவிடம் அதற்கான காரணத்தைக் கேட்டான். குரு சொன்னார் "இந்த ஒரு குத்துப் போதும். அதைப் பயிற்சி செய்." யூட் கவலைப் படாது அதை மட்டுமே கவனத்துடன் பயிற்சி செய்து வந்தான். ஒரு வருட பயிற்சி முடிந்ததும் குரு அவனைப் போட்டிக்கு அனுப்பினார். ஒற்றைக் கையுடன் சிறுவன் யூட்டை போட்டியில் பார்த்ததும் பலரும் கேலி செய்தனர். சிலர் அனுதாபப்பட்டனர். அவனோ எதைப் பற்றியும் கவலைப்படவில்லை. எதிர்த்து நின்ற எல்லோரையும் ஓரிரு குத்துக்களிலேயே வீழ்த்தி விட்டு முன்னேறினான். இப்போது இறுதிச் சுற்று. கனப்பொழுதில் எதிரியை வீழ்த்தி விட்டு வீரனாய் நின்றான், கோப்பையை வென்றான். எல்லோருக்கும் ஆச்சரியம். யூட்டாலும் நம்ப முடியவில்லை. குருவைக் கேட்டான் "குருவே ஒரேயொரு கையை வைத்துக்கொண்டு, அதுவும் ஒரேயொரு குத்தை மட்டமே கற்றுக் கொண்டு என்னால் எப்படி இவ்வாறாக வெல்ல முடிந்தது?" . நிதானமாகக் குரு சொன்னார் யூட் உன் வெற்றிக்குப் பின்னால் 2 காரணங்கள் உள்ளன. 1. நீர் எடுத்த முயற்சியுடன் கூடிய பயிற்சி, இது ஜூடோவிலே மிகவும் கடினமான குத்து யுத்தி. 2. இந்த குத்தைத் தடுக்க வேண்டுமென்றால் குத்துபவனின் இடக்கையை எதிரி மடக்கியபடி தடுக்க வேண்டும். அதுதான் உனக்குப் பிரச்சனை இல்லையே என்றார் குரு.

பார்த்தீர்களா! முயற்சியிருந்தால் பலவீனமும் பலமாகும் என்பது புலப்படுகின்றது. எனவே சிறுவர் நாமும் முயற்சியுள்ளவர்களாக சுறுசுறுப்புடன் வாழ வேண்டும். நாம் மேற்கொள்ளும் ஒவ்வொருமுயற்சிகளும் ஏதோ ஒரு விதத்தில் பலனை, செல்வத்தை உண்டாக்கும். இவ்வாறான ஒரு பக்தி முயற்சியே நாம் தியானிக்கும் செபமாலைத் தியானம். மேமாதம் வணக்கமாதம். ஒவ்வொரு நாளும் விசேடமாக செபமாலை சொல்ல வேண்டும். செபமாலையின் ஒவ்வொரு பத்து மணி செபத்திற்குப் பின்னும் "ஓ என் இயேசுவே எங்கள் பாவங்களை மன்னியும், நரக நெருப்பில் விழாமல் எங்களைக் காப்பாற்றும், எல்லா ஆன்மாக்களையும் சிறப்பாக உமது இரக்கம் யாருக்கு மிகுதியாகத் தேவையோ அவர்களை மோட்சத்தில் சேர்த்தருளும்" என்று சொல்லும் செபத்திற்கு அடியோலியதுதான் பாத்திமாவில் அன்னை கொடுத்த காட்சி. இக்காட்சியைப் பற்றி அறிந்து கொள்வோம்.

80 இலட்சம் உயிர்களை கொள்ளை கொண்ட முதல் உலகப் போரின் போது தேவ அன்னை போத்துக்கல் நாட்டில் உள்ள பாத்திமா என்னும் ஊருக்கருகில் மூன்று சிறுவர்களுக்குத் தோன்றினார் என்று முன்பு படித்துள்ளோம். அன்னை முதல் முறை தோன்றியது 13-05-1917 அன்று. அதன்பின் அன்னை ஆறு முறை காட்சியளித்த போதும் அவர் விடுத்த செய்தி மக்கள் எண்ண முடியாத பாவங்களைச் செய்கிறார்கள். அன்னையின் மாசற்ற இருதயத்திற்கு நிந்தையை வருவிக்கின்றார்கள். எனவே மனிதர் திருந்தி வாழ மனம்மாறி செபிக்க வேண்டும். பரித்தியாகங்கள் செய்ய வேண்டும். அதே வேளை உலக சமாதானத்திற்காக பக்தியுடன் அடிக்கடி செபமாலை செபிக்க வேண்டும். என்ற செய்திதான். எனவே இம்மாதம் சிறுவர் நாம் உலக நல்வாழ்வுக்காக செபிக்க முயற்சிப்போம். புனித கிளமன் கூறினார் "செபமாலை செபித்ததின் பயனாக மனம் திரும்பாத பாவியை நான் கண்டதில்லை" என்று. எனவே நாமும் நாளாந்தம் செபிப்போம். நாமும் மற்றவரும் ஈடேற்றம் அடைவோம்.

செபம்: அன்பின் ஆண்டவரே, காலங்கள் எம்மை நல்வழிப்படுத்தவே என்பதை உணர்ந்து தரப்பட்ட காலத்தில் நற்செயல்களைச் செய்வதுடன் எமது ஆன்மீகக் கடமைகளையும், பொறுப்புக்களையும் உணர்ந்து செயல்படவும் இந்த வணக்க மாதத்தில் செபமாலைப் பக்தி முயற்சியூடாக உம்மைத் தியானிக்கவும் ஏற்ற மனநிலையைத் தந்து வழிநடத்தியருளும் ஆமென்.

## சிறுவர் பக்கம் கேள்வி பதில்கள்

போட்டி விதிகள்

*இறுதித் திகதி: 10-06-2023
*மறைக்கல்வி மாணவர்கள் மாத்திரம் பங்கு பற்றலாம்.
*குலுக்கல் முறையில் இருவருக்கு 400/= வீதம் பரிசு வழங்கப்படும்.
*இதே கூப்பனில் உங்கள் பெயர், கல்வி கற்கும் தரம், பங்கு, விலாசம், தொலைபேசி இலக்கம் குறிப்பிட்டு அனுப்பவும்.
*அனுப்ப வேண்டிய முகவரி:
சிறுவர் பக்கம், கேள்வி-பதில்,
வெட்டாப்பு,
மறைக்கல்வி நடுநிலையம்
வெபர் வீதி,
மட்டக்களப்பு.

## சிறுவர் பக்கம் கேள்வி பதில்கள்: 55

### விடை தருக

*(சிறுவர்பக்க பகுதியை வாசித்து விடை எழுதுக)*

01) மே மாதத்தை நாம் எப்பெயரில் சிறப்பிக்கின்றோம்?

02) பாத்திமாவில் அன்னை முதல்முறை தோன்றியது எப்போது?

03) செபமாலை செபித்ததின் பயனாக மனம் திரும்பாத பாவியை நான் கண்டதில்லை என்று கூறியவர் யார்?

04) அன்னையிடம் உலக சமாதானத்திற்காக பரிந்து பேசும்படி மன்றாடி சிறு செபம் எழுதுக?

05) எந்த செயலிலும் முயற்சியுடன் இறை ஆசீர்வாதமும் தேவை என்பதை விளக்கி நண்பனுக்கு சிறு அறிவுரை எழுதுக? (சிறுவர் பதில்)

சிறுவர் பக்கம்:
கேள்வி - பதில்கள் - 55

பெயர்: ....................................................
....................................................
வகுப்பு: ....................................................
கல்வி கற்கும் பாடசாலை: ..........................
....................................................
விலாசம்: ....................................................
....................................................
....................................................
தொ.பே.இல: ....................................................

## சிறுவர் பக்கம்

### கேள்வி பதில்கள் 53 – முடிவுகள்

**விடைகள்**

01. பாபேல் கோபுர நிகழ்வு
02. கி.பி 70ம் ஆண்டு
03. பங்குனி 18ம் திகதி
04. யூலியன் என்பவர்
05. சிறுவர் பதில்

**பரிசு பெறுவோர்**

* N. லர்மிக்கா, முருகன் கோயில் வீதி, பாலமீன்மடு, மட்டக்களப்பு.
* பாலசுப்பிரமணியம் தில்ஷானி, 58 F, புனேரி வீதி, கல்முனை - 01, மணற்சேனை.

பங்குபற்றியோர்: 13
சரியான விடை எழுதியோர்: 13

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அருட்தந்தை டொமினிக் சாமிநாதன்

நினைவலை 01



கிளேனி ஆண்டகை, மட்டக்களப்பு - திருகோணமலை மறைமாவட்டத்தின் ஆயராக இருந்த காலத்தில் 24-08-1967ல் அவர் கையால் குருப்பட்டம் பெற்றுக்கொண்டவர் அருட் தந்தை டொமினிக் சாமிநாதன் அவர்கள். அருட்தந்தையின் ஆங்கிலப் புலமை, இளமை இவற்றைக் கண்டு ஆயர் கிளெனி அண்டகை அவர்கள் இவரை தனது செயலாளராக நியமித்துக் கொண்டார். அப் பொழுது தாண்டவன்வெளி பங்கு ஆயித்தியமலை தொடக்கம் இருதயபுரம், கருவேப்பன்கேணி, சகாயபுரம், கூளாவடி போன்ற பகுதிகளையும் உள்ளடக்கிய தான பரந்த, விரிந்த பங்காகக் காணப்பட்டது. அருட்பணி ஜேக்கப் அலெக்ஸாண்டர் பங்குத்தந்தை யாக இருந்தார். இவர் வயதானவர். இதனால் ஆயர் அவர்கள் தமக்குச் செயலாளராக இருந்த அருட்பணி சாமிநாதன் அவர் களை 1968ம் ஆண்டின் இறுதிப் பகுதியில் தாண்டவன்வெளிக்கு உதவிப்பங்குத்தந்தையாக அனுப் பியிருந்தார்.

தகரத்திலான இரும்புப் பெட்டி ஒன்றுடன் வந்து சேர்ந்த வர்தான் அருட்பணி சாமிநாதன் அடிகள். பங்குத்தந்தையிடம் கறுப்பு நிற Fort கார் இருந்தது. உதவிப் பங்குத்தந்தைக்கு எவ்வித வாகனங்களும் இல்லை. சில காலம் கால் நடையாக தனது அலுவல்களைக் கவனித்து வந்தார். சில காலத்தின் பின் ஒரு புதிய துவிச்சக்கர வண்டி அவருக்குக் கிடைத்தது. அது யாரால் வழங்கப்பட்டதென்பது எனக்குத் தெரியாது. சில நாட் களில் அதற்கு ஒரு பிரம்பினால் ஆன கூடையைப் பொருத்தி அதில் மந்திரிப்பு அலுவல்களுக் கான உடைகள், செபப்புத்தகங் கள், புனித நீர் போன்றவற்றை வைத்துக் கொண்டு இருதயபுரம், சகாயபுரம், கூளாவடி, கருவப் பங்கேணி, போன்ற பகுதிகளுக் கெல்லாம் சென்று மக்களைச் சந்திப்பது, அவர்கள் அலுவல் களைக் கவனிப்பது, அவர்கள் தேவைகளை நிறைவேற்றுவது என்று வெயில், மழை என்று பாராது பணியாற்றி வந்தார்.

பகல் பொழுதெல்லாம் வெளியில் அலைந்து மக்கள் பணி புரிந்தவர். இரவில் ஓய்வாய் இருக்க வில்லை. அந்தக் காலத்தில் எல்லோருடைய வீடுகளிலும் மின்சார இணைப்பு கிடையாது. மாணவர்கள் பெரும் பாலும் குப்பி விளக்கிலேயே கல்வி நடவடிக்கைகளை கவனித்து வந்தனர். சில மேல் வகுப்பு மாணவர்களை குருமனைக்கு வரவழைத்து மின் விளக்கில் அவர்கள் சிலமணி நேரம் பாடசாலை வேலைகளை நிறை வேற்றிக் கொள்ள உதவி செய்தார். ஆங்கிலப் பாடத்தை யும் அவர்களுக்கு இலவசமாகக் கற்பித்து வந்தார். சில மாணவர்கள் 6.00 மணி முதல் 9.00 மணி வரையும் படித்துவிட்டு வீடு செல்வார்கள். சிலர் மாலை 10-11 மணிவரை படித்துவிட்டு குருமனை விறாந்தையிலே தூங்கி காலை வீடு செல்வார் கள். ஆலயத்திற்கு காணிக்கைப் பொருட்களாக வரும் சிற்றுண்டி வகைகள் கூட படிக்கின்ற மாணவர்களின் சிற்றுண்டியாக வும் மாற்றம் காண்பதை நான் அறிந்திருந்தேன்.

அருட்தந்தை அவர்கள் ஆஸ்துமா நோயினால் பாதிக்கப் பட்டிருந்தார். சில வேளைகளில் இரவில் ஆஸ்துமாவால் அவதிக் குள்ளாகும் போது உடன் உள்ள மாணவர்களே அவரைக் கவனித்துக் கொண்டனர். ஒரு சில சந்தர்ப் பங்குளில் தனியார் வைத்திய நிலையங்களிலும் அவர் அனுமதிக்கப்படுவதுண்டு. அவ்வேளையிலும் அவரிடம் படித்த மாணவர்களே அவரைக் கவனித்த சந்தர்ப்பங்களும் உண்டு.

இளைஞர்களை அவர் அதிகமாக அன்பு செய்தவர். தாண்டவன்வெளியில் அந்த நாட்களில் கிறிஸ்தவ வாழ்வுச் சமூகம், கத்தோலிக்க இளைஞர் ஒன்றியம் போன்றவை அற்ற நிலையிலும் "Young christian workers" என்ற ஒரு அமைப்பை நிறுவி 10-15 இளைஞர்களைச் சேர்த்து கோழி, பன்றி, மான் போன்றவை வளர்க்கவும், குழுவாக செயற்படவும், ஊக்க மளித்து உற்சாகப்படுத்தியவர். அவரது முயற்சியையும் அவரது நோயையும் கருத்திலெடுத்த ஆயர் இல்லம் ஏறக்குறைய 3 ஆண்டுகளுக்கு பின்பே அவருக்கு ஒரு ஸ்கூட்டரை வழங்கியதாக அறிந்து கொண்டேன்.


(இன்றுமொரு சந்தர்ப் பத்தில் அருட்பணியாளர் ஆயித்திய மலையில் பங்குத்தந்தையாக பணியாற்றிய வேளை அதே பகுதிக்கு நான் கிராம சேவை யாளராக பணியாற்றக் கிடைத் தமை பற்றிய செய்திகளோடு சந்திக் கிறேன்.) *-யோ. பத்திநாதன்*

# மறையாசிரியர்களுக்கான மாதாந்த ஒன்றுகூடல்





மறைக்கல்வி நடுநிலை வருடாந்த செயல்திட்டத்திற்கமைய ஏப்ரல் மாதத்திற்கான மட்டக்களப்பு கோட்ட மறையாசிரியர்களுக்கான ஒன்றுகூடலானது 29-04-2023 அன்று காலை 9.00 மணிக்கு மட்டக்களப்பு மறைக்கல்வி நடுநிலையத்தில் ஆரம்பமானது. இவ் ஒன்றுகூடலில் மறையாசிரியர்களுக்கான மனித மைய மறைக்கல்வி பாடத்திட்டத்தை ஆயத்தம் பண்ணுவது பற்றி போதகர் அருமைராஜா அவர்களால் கற்பிக்கப்பட்டது. அதன்பின் வரவிருக்கும் விவிலிய வினாவிடைப்போட்டி, கட்டுரைப் போட்டி , மறையாசிரியர்களுக்கான தேசிய பரீட்சை, அடுத்த வருடம் வரவிருக்கும் மறைமாவட்ட எழுத்துப் பரீட்சை போன்ற விடயங்கள் கலந்தாலோசிக்கப்பட்டது. இவ் ஒன்றுகூடலுக்கு 72 மறையாசிரியர்கள் பங்குபற்றியிருந்தனர்.



29-04-2023 அன்று மறைக்கல்வி நடுநிலையத்தில் அருட்பணி ஜிரோன் த லீமா அடிகளாரின் தலைமையில் திருமண ஆயத்தக் கருத்தரங்கு நடைபெற்று சான்றிதழ்களும் வழங்கப்பட்டது. இதில் 35 பேர் பங்குபற்றி பயனடைந்தனர்.



29-04-2023 அன்று மறைக்கல்வி நடுநிலையத்தில் அருட்பணி **T.A.** ஜூலியன் அடிகளார் தலைமையில் புதிய நற்கருணைப் பணியாளர்களுக்கான பயிற்சி நடைபெற்றது. இதில் 09 புதிய நற்கருணைப் பணியாளர்கள் பங்குபற்றினர்.

ஆண்டவரே என் ஒளி அவரே என் மீட்பு (திபா 27:1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழிகாட்டும் இறைவார்த்தைகள் 13

-ஜே.எச். இரத்தினராஜா

## நாக தோஷம்

மக்கள் இன்று எத்தனையோ விதமான மூட நம்பிக்கைகளுக்கும், கட்டுக்கதைகளுக்கும் செவி சாய்த்து, இறை விசுவாசத்தைவிட்டு வழி விலகிப் போய்க்கொண்டிருக்கின்றனர். இப்படியான பல மூட நம்பிக்கைகளையும், கட்டுக்கதைகளையும் குறித்தே தற்போது நாம் சிந்தித்து வருகிறோம். இவ்விதமான நம்பிக்கைகள் எவ்விதமாக எமது இறை விசுவாசத்தை பாதிக்கின்றதாக இருக்கின்றது. இவ்விதமான மூட நம்பிக்கைகளில் ஒன்றான நாக தோஷம் என்ற விடயத்தைக் குறித்து இம்முறை சற்று சிந்திப்போம்.

திருமணத்திற்காக காத்திருந்த ஒரு சகோதரிக்கு நாக தோஷம் இருப்பதாக அவ்வூர் ஜோசியர் கூறினார். "நாக தோஷம்" என்பதைக் குறித்து விசாரித்தபோது நாகம் என்ற ஒரு வகைப் பாம்பினால் அவருக்கு சாபம் ஏற்பட்டிருப்பதாகக் கூறப்பட்டது. அவ்விதமாக ஏற்பட்ட அந்த நாக தோஷத்தை நீக்க சில காரியங்கள் செய்யப்பட வேண்டுமென்பதையும் தெரிவித்தனர்.

பொதுவாக "பாம்பு என்றால் படையும் நடுங்கும்" என்ற பழமொழியைச் சொல்லக் கேட்டிருப்போம். பாம்பினால் மனிதனுக்கு ஒரு சாபம் என்று சொல்லும்போது இறைவன் மீது நம்பிக்கை வைத்துள்ள விசுவாசிகளே நடுங்குகின்ற நிலையில் காணப்படுகின்றனர். ஆனால், இறைவார்த்தை எமக்குக் கற்றுத் தருவது ஒன்றே. சாத்தானானவன் சர்ப்பத்தைப் பயன்படுத்தி மனிதனை பாவம் என்ற சாபத்திற்கு ஆளாக்கினான். இதைத் தவிர இறைவன் படைத்த எந்தவொரு படைப்பினாலும் மனிதனுக்கு எந்த சாபமும் ஏற்படவில்லை. அவ்விதமாக எந்த மனிதனையும் சாபத்திற்கு உள்ளாக்க எந்த மிருகத்திற்கோ, பறவைக்கோ அல்லது ஊரும் பிராணிகளுக்கோ எவ்வித அதிகாரத்தையும் இறைவன் அருளவில்லை. அப்படியிருக்க இன்று மனிதர்கள் எவ்விதமாக இப்படிப்பட்ட கட்டுக்கதைகளுக்கு செவிகொடுத்து இறைவனால் படைக்கப்பட்ட உயிரினங்களுக்கு பூசைகளையும், வழிபாடுகளையும் செய்து தங்கள் சாபத்தை நீக்கும்படி வேண்டுதல் செய்வது எத்தனை அறிவீனமான செயலாக இருக்கின்றது. இப்படிப்பட்ட நம்பிக்கையை கிறிஸ்தவர்களும் கொண்டிருந்து இவ்விதமான செயல்களைச் செய்வது எவ்வளவு பரிதாபமான காரியம்.

அருமையான இறைமக்களே! சாத்தானின் தலையை சிலுவையில் நசுக்கிய இறைமகன் இயேசு, தம் சீடர்களுக்குக் கூறிய வார்த்தைகளை நினைவுகூர்ந்து பாருங்கள். "பாம்புகளையும், தேள்களையும் மிதிக்கவும், பகைவரின் வல்லமை அனைத்தையும் வெல்லவும் உங்களுக்கு அதிகாரம் கொடுத்திருக்கிறேன். உங்களுக்கு எதுவுமே தீங்கு விளைவிக்காது" லூக்கா 10:19 என்று கூறியிருக்கும்போது எப்படி எமக்கு சர்ப்பத்தினால் தோஷம் வரமுடியும்? ஆகவே, இவ்விதமான கட்டுக்கதைகளுக்கு செவிகொடுத்து விசுவாசத்தைவிட்டு வழிவிலகி விடாதபடி எச்சரிக்கையாக இருங்கள். ஏனெனில் இறைமகன் இயேசுவின் வார்த்தைகளுக்கு செவி சாய்க்காது தங்கள் விசுவாசத்தைவிட்டு வழிவிலகிப் போயிருக்கின்றார்கள். ஆகவே, வஞ்சிக்கின்ற சாத்தானின் பிடியிலிருந்து உங்களைக் காத்துக்கொள்ளுங்கள்.

**சிறுகதை**

## சிற்பி

உலகப் புகழ் பெற்ற சிற்பி அவர். கருங்கல் ஒன்றைப் பார்த்தார்.

அழகான குழந்தை இயேசு சிலையை வடித்தெடுத்தார். பார்த்தவர் பலரும் அசந்து போயினர்:

"இவ்வளவு அழகான சிலையா? அதுவும் இந்தக் கருங்கல்லிலிருந்தா?"

அழகான சிலையையும் சிற்பியையும் வீடியோ எடுத்த நிருபர் கேட்டார்: "இவ்வளவு அழகான சிலையை எப்படி உங்களால் உருவாக்க முடிந்தது? உங்கள் வெற்றியின் இரகசியம் என்ன? நாங்களும் வெற்றி பெற என்ன செய்ய வேண்டும்...?"

கையில் சிற்றுளியுடன் சிற்பி சொன்னார்:

"இந்த அழகான குழந்தை இயேசு சிலையை உருவாக்கியது நானில்லை.

அது.... அந்தக் கருங்கல்லுக்குள் ஏற்கனவே இருந்தது. என் கண்கள் அதைக் கண்டு கொண்டன.

அதன் வேண்டாத பகுதிகளை நீக்கினேன். அவ்வளவுதான். சிலை தானாகவே உருவாகிவிட்டது. இதுதான் வெற்றியின் இரகசியம்.

"நீயும் வெற்றி பெற வேண்டுமா?"

தொடர்ந்தார்:

"வேண்டாத பகுதிகளை நீக்கிவிடு. நீ அழகான சிற்பமாவாய்...!"

**உன்னையே செதுக்கிக் கொள் சிற்பி நீயேதான்...!**

# கூட்டொருங்கியக்கத் திருஅவை தொடர் 10

## ஓர் திருவிவிலியப் பார்வை

-யே. ஹேரோசினி.



### கூட்டொருங்கியக்க ஆண்டில் மரியா திருஅவையின் தாய் நினைவு உணர்த்தும் வெளிப்பாடு

மிலான் ஆயரான புனித அம்புரோஸ் நான்காம் நூற்றாண்டில் மரியாவைத் "திரு அவையின் தாய்" என அழைத்துள்ளார்.

புனித அகுஸ்தீனார் "நம்பிக்கை கொண்டோரை ஒன்றிணைத்து திரு அவைக்குள் பிறக்கச் செய்ததால், கிறிஸ்துவின் உறுப்புக்களின் தாயாக மரியா திகழ்கின்றார்" என்று எடுத்துரைத்துள்ளார். திருத்தந்தை முதலாம் லியோ "இறைமகன் கிறிஸ்துவின் தாயாகிய மரியா அவரது திரு அவை என்ற மறையுடலின் உறுப்புகளுக்கும் தாயாக இருக்கிறார்" எனக் குறிப்பிட்டுள்ளார். கி.பி. 1964இல் திருத்தந்தை 6ம் பவுல் மரியாவைத் திரு அவையின் தாய் என அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளார். கி.பி. 1975ம் ஆண்டு மரியா திரு அவையின் தாய் என்பதை சிறப்பிக்கின்ற திருப்பலி உரோமைத் திருப்பலி புத்தகத்தில் இணைக்கப்பட்டுள்ளது. திருத்தந்தை பிரான்சிஸ் மரியா திரு அவையின் தாய் என்ற விழாவை பெந்தகோஸ்து பெருவிழாவிற்கு அடுத்த நாள் சிறப்பிக்கும் வகையில் 2018ம் ஆண்டில் அறிமுகம் செய்துள்ளார். திருத்தந்தை இரண்டாம் யோவான் பவுல் "மீட்பரின் தாய்" என்னும் சுற்றுமடலில் மரியா திரு அவையின் தாய் என அழைத்துள்ளார். எனவே திரு அவையின் தொடக்கத்திலிருந்தே இறைமக்களிடம் இருந்த நம்பிக்கை உணர்வின் வெளிப்பாடாக இது அமைந்துள்ளது.

"திரு அவையின் உயரிய, சிறப்புப் பெற்ற முற்றிலும் தனித்தன்மை வாய்ந்த உறுப்பாகவும், நம்பிக்கை மற்றும் அன்பின் முன்குறியாகவும் மரியா போற்றப் பெறுகின்றார். கத்தோலிக்கத் திரு அவையும் தூய ஆவியால் கற்பிக்கப் பெற்று, பிள்ளைக்குரிய வாஞ்சையோடும் பற்றோடும் அன்புநிறைத் தாயாக ஏற்றுக்கொள்கின்றது." (திரு அவை எண் 53) "மரியா கிறிஸ்துவின் தாய், மக்களின் தாய் மற்றும் நம்பிக்கைக் கொண்டோரின் தாய் எனப் போற்றப்படுகின்றார்." (திரு அவை எண் 54)

கபிரியேல் வானதூதர் மரியாவிற்கு மங்கள வார்த்தை கூறிய பொழுது, இதோ ஆண்டவரின் அடிமை எனத் தலைவணங்கி இறைவிருப்பத்தை ஏற்றுக்கொண்டார். இறைமகன் இயேசுவைப் பெற்றெடுத்து இறைவனின் அன்னையானார். அக்கிறிஸ்து இயேசுவே திரு அவையின் மூலைக்கல். (தி.ப. 4:11, எபே. 2:20, 1 பேது. 2:6) இவ்வாறு திரு அவையின் மூலைக்கல்லைச் சுமந்து பெற்றெடுத்த தாய் அத்திரு அவையின் தாயாக விளங்குகின்றார் எனக் கூறுவதில் வியப்பில்லை. மரியா இயேசுவின் முதல் அருஞ்செயலாக விளங்கிய தண்ணீரை திராட்சை இரசமாக மாற்ற தூண்டியவர். (யோவா. 2) இவ்வாறு செய்ததால் இயேசுவிடம் பலர் நம்பிக்கை கொள்வதற்கு மரியா வழிகாட்டினார். குறிப்பாக இயேவைப் பின் தொடர சிந்தித்த சீடர்களுக்கு இந்நிகழ்வு நம்பிக்கையின் அடித்தளமாக அமைந்தது. அத்தோடு இயேசுவோடு கல்வாரி பயண இறுதி வரை நடந்தார். அவருடைய உடனிருப்பை இயேசுவோடு நிறுத்திவிடவில்லை. மாறாக சீடர்களோடும் மரியா இருந்தார். இயேசுவின் இறப்பிற்குப் பின் உள்ளம் தளர்ந்த சீடர்களை திடப்படுத்தினார். (தி.ப. 1:14) "இதோ உம் தாய" என கல்வாரி மலையில் நமக்காகத் தரப்பட்ட மரியா திரு அவையின் தாயாக திகழ்கின்றார். இவ்வுலகில் ஆண்டவரது நாள் வரும் வரை (2 பேது. 3:10) பயணம் செய்யும் இறைமக்கள் முன்பு உறுதியான எதிர்நோக்குக்கும் ஆறுதலுக்கும் அடையாளமாக மரியா ஒளிர்கின்றார். (திரு அவை எண் 68)

கடந்த காலங்களில் திரு அவை எதிர்கொண்ட அனைத்து வகையான அச்சுறுத்தல்களுக்கும் மத்தியில் மரியாளின் பரிந்துரை திரு அவையை பாதுகாத்து வழிநடத்தி வந்துள்ளது. மரியாவிடம் உள்ள சிறந்த குணங்களையும் கடவுளுக்கு எந்தளவு கீழ்ப்படிந்தார் என்பதையும் சிந்திப்போம். அனைத்து அனுபவங்களிலும் நமக்காக பரிந்து பேசுபவராக மரியா திகழ்கின்றார். கூட்டொருங்கியக்க ஆண்டானது ஒவ்வொருவரையும் மரியாவைப் போன்று இறைத்திட்டத்தை உணர்ந்து, நிறைவேற்ற அழைப்புவிடுக்கின்றது. (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆழ்ந்த அனுதாபங்கள்



மரியாளின் பிரான்சிஸ்குவின் மறைபரப்பு (FMM) சபையின் மறைபரப்பாளரும், இலங்கை நாட்டிற்கு சேவை செய்ய வந்த மறைபரப்பாளர்களின் இறுதி மறைபரப்பாளருமான

**அருட்சகோதரி மரிய குரூஸ் அவர்கள்**

01~04~2023 அன்று இறைபதம் அடைந்தார்.

அருட்சகோதரி மரிய குரூஸ் அவர்கள் 1931ம் ஆணடு ஆடி மாதம் 7ம் திகதி பில்பாவோ, ஸ்பேன் நகரில் விசுவாசமும் இறை பற்றும் உள்ள ஓர் பெற்றோருக்கு பிறந்தார். இயேசுவின் அன்பினால் உந்தப்பட்டு இறைவன் தன்னை இறை சேவைக்காக அழைக்கிறார் என்பதை உணர்ந்தவராக தன்னை முற்றுமுழுவதுமாக அர்ப்பணிக்க முன்வந்து, மரியாளின் பிரான்சிஸ்குவின் மறைபரப்பு சபையில் (FMM) 1951 ம் ஆண்டு ஆனிமாதம் 11ம் திகதி இணைந்தார்.

தனது சிறிய வயதிலேயே மறைபரப்பாளராக இலங்கைக்கு அனுப்பப்பட்டார். 1956ம் ஆண்டு இலங்கையில் தனது இறுதி வாக்குத்தத்தத்தை செய்து கொண்டார்.

அருட்சகோதரி மரிய குரூஸ் என்றால் மாந்தீவு தொடக்கம் அம்பாறை வரை எல்லா மக்களும் அதாவது கத்தோலிக்கர், இந்துமக்கள், முஸ்லீம் மக்கள், சிங்கள தமிழ் மக்கள் எல்லோருக்கும் தெரியும். மறைபரப்பாளராக இலங்கைக்கு வந்து தனது வாழ்வில் அதிகமான வருடங்களை எமது மட்டக்களப்பு மறைமாவட்டத்தில் சேவை செய்வதில் அதிலும் விசேடமாக ஏழைகளுக்கும் தொழுநோயாளர்களுக்காக சேவை செய்வதில் செலவழித்தார். தனது தாய்மொழி ஸ்பெனிஸ் (Spanish) மொழியாக இருந்தாலும். தமிழ் சிங்கள மொழிகளை கற்று எல்லா மக்களோடும் தொடர்பு கொள்ளக்கூடிய அளவு பணிபுரிந்தார். அவர்களை ஓர் விசுவாசமும் திடமும் நிறைந்த அருட்சகோதரி என்று கூறினால் அது மிகையாகாது.

தொழுநோய்களைப் பொறுத்தமட்டில் அருட்சகோதரி மரிய குரூஸ் ஒரு தாய். அவர்களை மட்டுமல்ல நோயாளர்களின் குடும்பங்களையும் தனது குடும்பங்கள் என எண்ணி அவர்களின் எல்லா தேவைகளையும் பூர்த்தி செய்து வந்தார். எமது மறைமாவட்டத்தில் அம்பாறை, அக்கரைப்பற்று, கல்முனை, சம்மாந்துறை, மருதமுனை, காரைதீவு, தேற்றாத்தீவு, கொக்கட்டிச்சோலை, ஆரையம்பதி, திருப்பெருந்துறை, திராய்மடு, செங்கலடி, புல்லுமலை, ஆயித்தியமலை, வீச்சுக்கல்முனை, மாந்தீவு ஆகிய பல இடங்களிலும் உள்ள தொழுநோயாளர்களையும் அவர்களது குடும்பங்களையும் பராமரித்து வந்த பெருமை அருட்சகோதரியையே சாரும். இன்று அவரின் அரவணைப்பில் வாழ்ந்த ஏழைக் குடும்பங்கள் அவரின் பிரிவை நினைத்து கண்ணீர் சொரிந்து, அவருக்காக இறைவனுக்கு நன்றி கூறுகின்றனர். அவருடைய இறுதி வாழ்வை பிலியந்தலை புனித சூசையப்பர் வயோதிபர் இல்லத்தில் கழித்து இவ்வாண்டு ஏப்ரல் 1ம் திகதி இறைவனடி சேர்ந்தார்.

அன்பின் அருட்சகோதரியே உமக்காகவும், உமது அர்ப்பணமுள்ள பணிக்காகவும் இறைவனுக்கு நன்றி கூறுவதோடு, நீர் இறை சந்நிதானத்தில் இறை இன்ப வாழ்வைத் தொடர பிரார்த்திக்கிறோம்.

*-அருட்சகோதரி சலோமி மொறாயஸ் (FMM)*

# திருஅவையின் கட்டளைகள்

*-செல்வி. T.T.M. இராஜேந்திரம்*

**அறிமுகம்...:**

தமது உயிர்ப்பின் பின்னர் இவ்வுலகில் ஆரம்பித்து வைத்த விடுதலையின் வழியினை அனைத்துலக மக்களுக்கும் போதிக்கும் கடமையை இயேசு தம் சீடர்கள் மேல் சுமத்தியுள்ளார். இக்கடமையினை நிறைவேற்றுவதற்காகத் தாம் பெற்றுள்ள அதிகாரங்களை வழிமுறைப் படுத்தி நடத்துவதற்கு இச்சீடர்களுக்கும், அவர்களின் வழிவந்தவர்களுக்கும் கடமையுண்டு என்பதில் எவ்விதம் ஐயப்பாடும் இல்லை. இக்கடமையை நடைமுறைப்படுத்துவதற்காகத் திருஅவையின் ஆறு கட்டளைகளாகும். ஏனைய விடயங்கள் திருஅவையின் சட்டக்கோவையில் அடங்கியிருக்கின்றன. "கோடெக்ஸ் யுரிஸ் கனோனிச்ஸ்" என இலத்தீன் மொழியில் அழைக்கப்படும் சட்டக்கோவை இரண்டாம் வத்திக்கான் திருச்சங்கத்தின் அறிவுரைக்கேற்ப கோர்க்கப்பட்டு 1983ம் வருடம் தை மாதம் 25ந் திகதி வெளியிடப்பட்டது.

**திருஅவையின் கட்டளைகள்:**

திருஅவையின் முக்கிய கட்டளைகள் ஆறு உள்ளன.

1. ஞாயிற்றுக் கிழமைகளிலும், கடன் திருநாட்களிலும் முழுத்திருப்பலியில் பங்கேற்பது.
2. வருடத்திற்கு ஒரு முறையாவது ஒப்புரவு அருட்சாதனம் பெறுவது.
3. உயிர்ப்பின் காலத்தில் நற்கருணை உட்கொள்வது.
4. குறிப்பிட்ட தினங்களில் ஒருசந்தி, சுத்தபோசனம் ஆகியவற்றை அனுசரித்தல்.
5. தடைசெய்யப்பட்ட காலத்திலும், விக்கினங்கள் இருக்கும் போதும் திருமணம் செய்யாதிருத்தல்.
6. திருச்சபையின் பராமரிப்பிற்காகக் காணிக்கை செலுத்துதல்.

**1) ஞாயிற்றுக்கிழமைகளிலும், ஏனைய கடன்திருநாட்களிலும் முழுத் திருப்பலியில் பங்கேற்பது:**

ஞாயிற்றுக் கிழமைகளிலும், ஏனைய கடன்திருநாட்களிலும் நாம் திருப்பலிகளில் சகல பக்திமரியாதையுடனும் பங்கேற்கவேண்டும். திருப்பலியைப் "பார்ப்பது" அல்லது "கேட்பது" எனச் சிலர் கூறுவதுண்டு. இவ்வாறு கூறுவது முற்றிலும் தவறாகும். இறைமக்களாகிய நாம் இறைவனுக்கு ஒப்புக்கொடுக்கும் தியாகப்பலியே திருப்பலி. அதை முன்னின்று ஒப்புக்கொடுக்க ஒரு குருவானவர் இருந்தாலும், அதில் பங்கேற்கும் நாம் அனைவரும் பங்காளராவோம். அதனால் அங்குமிங்கும் பராக்குப் பார்த்துக்கொண்டும், இடையிடையே பேசிக் கொண்டிருப்பதும், திருப்பலி நடக்கும் இடத்தில் கேலி பேசவும் கூடாது. இத்தகைய செயல்களில் ஈடுபடுவோர், தாம் குற்றம் செய்பவர்களாவதுடன், பக்கத்திலிருந்து திருப்பலியில் பங்குபற்றுபவரின் பக்திக்கு இடையூறு விளைவிப்பவர்களாக மட்டுமல்லாமல், இறைவனது ஆலயத்தை அவசங்கைப்படுத்துபவர்களாகவும் இருப்பர். இதைவிட அவர்கள் அங்கு வராமலிருப்பதே பொருத்தமாகும். திருப்பலியில் பங்கேற்போர் தமது உடல், உள்ளம் அனைத்தையும் அதனோடு இணைத்து பங்கேற்க வேண்டும். திருப்பலி காண வேண்டியது கடனாக உள்ளது.

ஞாயிற்றுக்கிழமைகளிலோ, ஏனைய கடன்திருநாட்களிலோ திருப்பலியில் கலந்து கொள்ள வேண்டும் எனும் கடமையை அதற்கு முந்தின நாள் மாலையில் அதற்கென நடைபெறும் திருப்பலியில் கலந்து கொள்வதால் நிறைவேற்ற முடியும். நோயுற்றிருப்போரும், அருகாமையில் திருப்பலி நடைபெறாத இடங்களில் வாழ்வோரும், அத்தியாவசிய சேவையில் ஈடுபட்டிருப்போரும் கடன் திருப்பலியில் கலந்து கொள்ள முடியாமல் போனால் தவறில்லை. எனினும் அவ்வாறான வேளைகளில் பொருத்தமானதொரு செபவழிபாட்டில் கலந்து கொள்ளவோ, அல்லது தனித்துச் செபத்தில் ஈடுபடவோ அவர்கள் முயற்சி செய்ய வேண்டும். ஞாயிற்றுத் திருப்பலியில் பங்கேற்பதை ஒரு பெரும் சுமையாகக் கருதாமல், நம்மை எல்லையற்ற அன்பினால் நேசிக்கும் இறைவனை அன்பு செய்யும் மேன்மை மிக்கதொரு செயலாகக் கருத வேண்டும். திருஅவையின் கட்டளையாக இருப்பதற்காக மட்டுமல்லாது திருப்பலியில் பங்கேற்பதை நமது பழக்கமாகக் கொள்வதே சிறந்த செயற்பாடாகும்.

நாம் இலங்கை வாழ் கத்தோலிக்கர்கள். இலங்கைக்கென நியமிக்கப்பட்டுள்ள கடன்திருநாட்களை நாம் அனுசரிக்க வேண்டியவர்கள். அவை எவையெனப் பார்ப்போம்.

1. வருடத்தில் வரும் அனைத்து ஞாயிறு தினங்கள்.
2. இறைவனின் அன்னையாகிய தூய மரியாவின் திருவிழா (தை - 01)
3. தூய மரியன்னையின் விண்ணேற்புத் திருவிழா (ஆவணி - 15)
4. தூய மரியன்னையின் அமல உற்பவத் திருவிழா (மார்கழி - 08)
5. கிறிஸ்து பிறப்புப் பெருவிழா (மார்கழி - 25)

*-(தொடரும்)*

**ஆண்டவரே என் வலிமை என் கேடயம் (திபா 27:1)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறையாசிரியர் முதல் தேர்வுக்கான கடந்த கால வினாக்களும் விடைகளும்

14. 1-3ம் தரத்தின் கத்தோலிக்க மறை பாடத்திற்கான தேர்ச்சிகளை எழுதுக?
- இறைதந்தையின் அன்பை படைப்பின் மூலம் உணர்ந்து கொள்வார். நன்றி செலுத்துவார், பிரதி அன்பு செலுத்துவார்.
- இறைதந்தையுடன் உரையாடுவார்.
- இறைதந்தையின் பிள்ளையாக மாற்றமடைவர்.
- இயேசுவின் விசேட பண்புகளைப் பெயரிடுவார்.
- தூயவர்களின் வாழ்வையும் திருவிவிலியத்தையும் அறிந்து கொள்வார்.

15. ஆரம்ப வகுப்புகளுக்கான பாட நோக்கங்களைத் தருக?
- இயற்கையின் மூலமும் அயலவர்களின் மூலமும் இறையன்பை அனுபவித்தல்
- இயேசு கிறிஸ்துவுடன் தொடர்பை வளர்த்துக்கொள்ளுதல்.
- திருவிவிலியம் இறைவார்த்தை என்பதை ஏற்றுக்கொள்ளுதல்.
- நல்ல கிறிஸ்தவர்களாக வாழ்வதற்கு முயற்சி செய்தல்.
- மரியன்னை, புனிதர்கள் - இவர்களின் முன்மாதிரிகையான வாழ்வைப் பின்பற்றுதல்.
- இறைவனின் பரிசான சுற்றாடலை அன்பு செய்தல்.
- பிறருடன் ஒற்றுமையாக வாழுதல்.
- கிறிஸ்தவ மதிப்பீடுகளை பாராட்டுதல்.
- இலங்கைக் கத்தோலிக்க திருச்சபையை அறிந்து கொள்ளுதல்.

16. இரண்டாம் தர பாடநூலில் மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தப்படும் தூயவர்களைப் பெயரிடுக?
- தூய டொமினிக் சாவியோ - தூய நிக்கலொஸ்
- தூய யூதாததேயு

17. 4ம் தர பாடநூலில் முன்வைக்கப்படும் அருளடையாளங்கள் எவை?
- திருமுழுக்கு - ஒப்புரவு - நற்கருணை

18. தூய ஆவியானவர் திருத்தூதரில் எழுந்தருளியதன் பின் திருச்சபை வளர்ச்சியுற்ற விதத்தைக் காட்டும் எழுத்து வடிவ சாட்சிகளைப் பெயரிடுக?
- திருத்தூதர் பணி நூல் - திருமுகங்கள்
- திருத்தூதரின் படிப்பினைகள் அடங்கிய டிடாக்கே நூல்
- ஆயர் கிளமென்ட், அந்தியோக்கியாவின் இஞ்ஞாசியாஸ் அடிகளார் ஆகியோரின் சில கடிதங்கள்.

19. கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை (குடியேற்றம்) பெருகியத னால் அதனை நிர்வகிப்பதற்காக நியமிக்கப்பட்டவர்கள் யார்?
- பெரியோர் - முதல்வர்

20. திருச்சபைக்கு எதிராக ஏற்பட்ட முதல் துன்புறுத்தலின்போது (கலாபனை) கொல்லப்பட்ட திருச்சபையின் தலைவர்கள் யார்?
- தூய பேதுரு - தூய பவுல்

02) (அ) இஸ்ரயேல் மக்கள் எருசலேமில் கொண்டாடிய முக்கிய திருவிழாக்கள் மற்றும் சமய கொண்டாட்டங்களில் ஏதேனும் ஐந்தைத் தருக?
- புளிப்பற்ற அப்பங்களை உண்ணும் பாஸ்கா திருவிழா
- பெந்தகோஸ்தே விழா
- கூடார விழா அல்லது அறுவடை விழா
- அர்ப்பண விழா : - ஓய்வு நாள் - பச்சாதாப நாள்
- தானிய விழா - பாஸ்கா திருவிழா

ஆ) புனித நாட்டில் வாழ்ந்த இஸ்ரயேல் மக்களின் வாழ்க்கை பற்றி 100 சொற்களளவில் விளக்குக?
- இக்காலத்தில் இஸ்ராயேல் மக்களின் வாழ்வில் பெரிதாக மாற்றங்கள் ஏதும் ஏற்பட்டதாக தெரியவில்லை
- பொதுமக்களிடமிருந்து தேவாலய வரி சேகரித்து உயர்மட்ட மக்கள், செல்வ நிலையில் வாழ்ந்தார்கள்.
- விசேடமாக எருசலேமுக்கு அண்மையில் வாழ்ந்த குரு மரபினர் பொதுமக்களை வருத்தி தாங்கள் ஏற்படுத்திக் கொண்ட சட்டம், சம்பிரதாயத்திற்கேற்ப உயர்நிலை வாழ்க்கை வாழ்ந்தார்கள்.
- இடையர் வாழ்விலும் விவசாயத்திலும் மக்களின் பொருளாதாரம் தங்கியிருந்தது.
- கலிலேயாவில் பலர் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டனர். (லூக் 5:1-11, மத் 4:18-22, மாற் 1:16-20).
- விவசாயம் பற்றிய மனநிலையை புதிய ஏற்பாட்டில் காணலாம். (மத் 13:1-9, 13:24-30, யோவா 15:1-11)
கலிலேயர்களை பலவீனர்கள், அறிவற்றவர்கள் என வெளி உலகினர் எண்ணினர். சமரியர் தமது பிரதேசத்தில் மட்டுமே வாழ்ந்தனர். அவர்கள் முரட்டுக் குணம் படைத்தவர்கள்.
- யூதேயாவில் வாழ்ந்த பலர் கிரேக்கமொழி கற்று அறிவாளிகளாயிருந்தனர்.
- தலைக்கணம் கொண்டவர்களும் எருசலேமுக்கருகில் வாழ்ந்தனர். இவர்கள் இரட்டை வாழ்க்கை வாழ்ந்தனர்.
- மேசேயின் சட்டத்தை நுணுக்கமாகக் கடைப்பிடிப்பதாகக் கூறி மக்களிடமிருந்து ஆலய வரி சேகரித்து, சுகபோக வாழ்க்கை வாழ்ந்தனர்.
- மொழிக்கேற்ப கிரேக்கமொழி கற்றோர், அரமெய்க் மொழி பேசுவோர் என சமுதாயம் பிரிக்கப்பட்டிருந்தது. *(இத்தகைய கருத்துக்கள் 100 சொற்களளவில் இருத்தல் வேண்டும்)*

(தொடரும்)

# க.பொ.த (சா/த) பரீட்சைக்கான மாதிரி வினாக்களும் விடைகளும்

## தரம் - 10ற்கான மீட்டல் வினா விடைகள்

*அன்னை திரேசா*

80. இவர் எப்போது இத் துறவற சபையை நிறுவினார்? 1948.08.17

81. புனித அன்னை திரேசா செய்த பணிகள் யாவை?
- உயிரிழக்கும் நிலையில் வீதியின் இருபக்கமும் விழுந்து கிடந்தவர்கள், மனித நேயத்துடன் பிறரின் பாதுகாப்பு, உதவியுடன் இறப்பதற்கு வழி அமைத்துக் கொடுத்தார்.
- எயிட்ஸ் நோயாளர்களைப் பராமரித்தார். இவர்களுக்கென ஒரு இல்லத்தை 1985 ஆம் ஆண்டளவில் நியூயோக் நகரில் நிறுவினார்.
- வீதியோரங்களில் இருந்த பிள்ளைகளுக்கு பாடசாலை ஒன்றை ஆரம்பித்தார்.
- அசுத்தமான சூழலில் இருந்து வந்த வீதியோரப் பிள்ளைகளின் உடலையும், ஆடைகளையும் சுத்தம் செய்து உணவளித்துக் கல்வி புகட்டினார்.
- சேரிகளின் வாழ்வோரை சாதி, மதம் பாராமல் கைவிடப்பட்டோர், அநாதைகள், நோயாளர்கள், மரணத்தறுவாயிலிருந்தவர்களுக்கு அரவணைப்பும் அன்பும் வழங்கினார்.

82. இவருக்கு வழங்கப்பட்ட விருதுகள் எவை?
- "ஏழைகளுக்கு உதவும் தூதா", "எம்முடன் வாழும் புனிதை"

83. இவர் எப்போது இறைவனடி சேர்ந்தார்? - 1997.09.05

84. இவர் எப்போது அருளாளர் நிலைக்கு உயர்த்தப்பட்டார்?
- 2003.10.19

85. இவர் எப்போது புனிதர் நிலைக்கு உயர்த்தப்பட்டார்? - 2016.09.04

*புனித மக்ஸிமிலியன் கோல்பே*

86. புனித மக்ஸிமிலியன் கோல்பே எப்போது பிறந்தார்?
- 1894.01.08

87. இவரது சிறுபராயத்தில் இடம்பெற்ற முக்கிய நிகழ்வுகள் எவை?
ஆலயத்தில் செபித்துக்கொண்டிருக்கையில் தேவ அன்னை காட்சி கொடுத்து சிவப்பு நிற முடியையும், வெள்ளை நிற முடியையும் காட்டினார். சிவப்பு நிற முடி மறைசாட்சி வாழ்வையும் வெள்ளை நிற முடி தூய்மையையும் குறிக்கின்றது என்பதை உணர்ந்து அவர் இரண்டையும் தெரிந்து கொண்டார்.

88. இவர் சேர்ந்த குருமடத்தின் பெயர் என்ன?
- கொன்வென்சுலல் பிரான்சிஸ்கன் குருமடம்

89. இவர் எப்போது குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார்?
- 1919ம் ஆண்டு

90. இவர் ஆரம்பித்த சபையின் பெயரினையும் அதன் நோக்கத்தினையும் குறிப்பிடுக?
- சபை - மரியாயின் மாசற்ற இருதய சேனை
- நோக்கம் - செபம், தபச்செயல்கள் வழியாக உலகின் பாவநிலையை தோற்கடித்தல்.

91. இச்சபைக்கு உதவிய பத்திரிகையின் பெயர் என்ன?
- போர் வீரன்

92. கோல்பே அடிகளார் ஏன் சிறையில் அடைக்கப்பட்டு வதைக்கப்பட்டார்?
- இரண்டாம் உலக யுத்தத்தின் போது ஜேர்மன் நாடு போலந்தைக் கைப்பற்றிய போது கோல்பே அடிகளாருக்கு சொந்தமான அச்சகத்தில் "உண்மை" என்ற பத்திரிகை ஒன்றை வெளியிட்டதற்காக.

93. கோல்பே அடிகளார் ஏன் மரணத்திற்கு தெரிவு செய்யப்பட்டார்?
- தப்பியோடிய கைதி ஒருவருக்காக 20 கைதிகளைக் கொலை செய்த அம்முகாமில் பிரான்சிஸ் என்ற ஒருவருக்குப் பதிலாக தன்னைக் கொல்லும்படி கூறி முன்வந்தமையினால்.

94. கோல்பே அடிகளார் எவ்வாறு இறந்தார்?
- நிலவறையில் மற்றைய கைதிகளுடன் பட்டினியால் வதைக்கப்பட்டார். அவர்கள் கோல்பே அடிகளாருடன் அருள் நிறைந்த மரியே செபத்தை செபித்துப் பாடல்கள் பாடினார். சிறைக்கைதிகள் படிப்படியாக இறந்த போது கோல்பே அடிகளார் மட்டுமே சுயநினைவுடன் இருப்பதைக் கண்டு உடலில் வி'மேற்றிக் கொன்றனர். அவர் அருள்நிறைந்த மரியே செபத்தை உச்சரித்துக்கொண்டே இறந்தார்.

95. கோல்பே அடிகளார் எப்போது இறந்தார்? 14.08.1941

96. கோல்பே அடிகளார் எப்போது, யாரால் அருளாளர் நிலைக்கு உயர்த்தப்பட்டார்? - 17.10.1971 , ஆறாம் அருளப்பர் சின்னப்பர்

97. கோல்பே அடிகளார் எப்போது, யாரால் புனிதர் நிலைக்கு உயர்த்தப்பட்டார்?
- 10.10.1982, இரண்டாம் அருளப்பர் சின்னப்பர்

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மறையாசிரியர் இடைநிலைத் தேர்வுக்கான கடந்த கால வினா விடைகள்

16. தூய லூக்கா தன் நற்செய்திக்கான ஆதாரங்களை எங்கிருந்து பெற்று எழுதினார்?
- தூய பவுலடியார் சைப்பிரஸ் தீவில் சிறையிலிருந்த போது கிறிஸ்துவுடன் பழகியவரை சந்தித்து, அவர்கள் மூலம்.
- சமாரியா நாட்டு திருத்தூதரான திருத்தொண்டர் பிலிப்புவை அவர் சந்தித்திருக்கலாம்.
- தூய பவுலுடன் பழக கிடைத்தமை
- பல எழுத்துக் கோர்வைகளிலிருந்து
- தூய மாற்கு எழுதிய நற்செய்தியிலிருந்து
- தூய மத்தேயு நற்செய்தியிலிருந்து

17. மனமாற்றம் பெற்ற சவுலுக்கு திருமுழுக்கு அளித்தவர் யார்?
- அனனியா

18. தேவநற்கருணை பற்றிய பழைய ஏற்பாட்டின் அடையாளங்களை எழுதுக?
- அப்பமும் திராட்சை இரசமும்
- மன்னா உணவு - பாஸ்கா உணவு

19. உறுதிப்பூசுதல் பெறுபவரின் நெற்றியில் கிறிஸ்மா எண்ணெயினால் சிலுவையடையாளம் வரைந்து என்ன வார்த்தை கூறி ஆயர் உறுதிப்பூசுதல் அளிப்பார்?
- "தூய ஆவியின் முத்திரையைப் பெற்றுக்கொள், பரம தந்தையின் உன்னத கொடை அவரே"

20. பாவத்தினால் மனிதனுக்கு உண்டாகும் கேடுகள் எவை?
- இறைவனிலிருந்து தூர விலகிச் செல்கிறான்
- மனிதரிலிருந்து தூய விலகிச் செல்கிறான்

02). (அ) குரு மரபின் சிறப்பு பண்புகள் 5ஐ எழுதுக?
- கி.மு. 500ம் ஆண்டளவில் எழுதப்பட்டு கி.மு 422 ஆண்டளவில் 'J' 'E' 'D' மரபுகளோடு கலந்தது. பபிலோனிய அடிமைத்தனத்தின் தாக்கங்கள் இஸ்ராயேல் மக்களைப் பாதித்ததினால் அவர்களின் விசுவாசத்தை புதிய முறையில் முன்வைக்க நேர்ந்தது. இதற்காக குருக்களின் 'P' எழுத்து வடிவம் மரபாக்கப்பட்டது.
- தொடக்க நூலில் 1ம் அதிகாரம் தொடக்கம் மோசேயின் இறப்பு வரையுள்ள பகுதி இம்மரபிற்கு உரியது. (இச. 34:1-9)
- விடுதலைப்பயண நூலில் கடைசி 6 அதிகாரங்களிலும் இம்மரபு அதிகளவில் காணப்படுகிறது.
- லேவியராகமம் முழுவதிலும் எண்ணிக்கை, ஆகமத்தில் முதல் 10 அதிகாரத்திலும் 'P' மரபுள்ளது.
- திருவழிபாடு, சடங்கு முறைகள், குருத்துவ சடங்கு சம்பிரதாயங்கள் ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது.
- உள்ளத்தூய்மைக்கும் பரிசுத்ததனத்திற்கும் முக்கிய இடம் கொடுக்கப்பட்டுள்ளது.
- பாரம்பரிய கருத்துக்களுக்கு முதலிடம் கொடுக்கப்பட்டுள்ளது.
- பரம்பரை (மரபு பட்டியல் எணணிக்கை கூடுதலாக பயன்படுத்தப்பட்டுள்ளது)
- இறைவனை மனிதனாக காண்பதில்லை.

ஆ) இணைச்சட்ட மரபு 'D' பற்றி கீழ்க்காணும் விடயங்களின் கீழ் விளக்குக?
- அமைப்பு : இலக்கிய நடை, அறிவுரை, இறைவாக்குகள், ஞானம், சடங்கு முறை.
- அரசியல் தொடர்பு : உடன்படிக்கை வாழ்விற்கு அழைப்பு.
- மேன்மையான வரலாற்று மனிதர் : மோசே
- இஸ்ரயேல் தொடர்பான வெளிப்பாடு : சமூகம் அல்லது பொது குடும்பம். *(இத்தகைய விடயங்களின் கீழ் விளக்கி எழுதல்)*

03). அ) இஸ்ரயேல் மக்கள் அடிமைகளாக இருந்தபோது எகிப்தியரிடமிருந்து கற்றுக் கொண்ட ஐந்து விடயங்களை விளக்குக?
- இவர்கள் வாழ்ந்த வாழ்க்கை இறைவனின் மீட்புத் திட்டத்தில் ஒரு பகுதியாகும்.
- எகிப்திய பழங் கலைகளைக் கற்றுக் கொண்டனர்.
- நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட அரசியல் வலல்மையை அனுபவ ரீதியாகக் கண்டனர்.
- அனுபவ ரீதியான கஸ்டங்கள்
- விவசாய, நீர்ப்பாசனத் தொழில் நுட்பங்களைக் கற்றுக் கொண்டனர்.

(இத்தகைய விடயங்கள் ஐந்தைப் பற்றி விளக்கி எழுதல் வேண்டும்)

*(தொடரும்)*

## மறையாசிரியர் இறுதித் தேர்வுக்கான கடந்த கால வினா விடைகள்

16. திருவழிபாடு பற்றிய வெளியீட்டில் குறிப்பிடுவதன்படி தாய் திருச்சபையானது தூய மரியாளுக்கு சிறப்பான பக்தியும் அன்பும் காட்டுவது ஏன்?
- அவர் இயேசுவின் மீட்புப் பணியில் சிறப்பான பங்காற்றியதால்.

17. இலங்கையில் பிற மறைகளுடனான நல்லுறவைக் கட்டியெழுப்புவதற்கான வழிமுறைகள் எவை?
- பிற மதத்தினரோடு அன்போடு உரையாடுதல்
- அவர்களோடு ஒத்துழைத்தல்.
- பிற மதத்தினரின் அருள் நெறி, அறநெறி சார்ந்த நலன்களையும் சமூக, பண்பாட்டு விழுமியங்களை மதித்தல்.

18. திருத்தொண்டருக்கு தரப்படும் சிறப்பான பணிகள் எவை?
- கிறிஸ்துவின் தூதுப்பணிக்கும் விசேட அருளுக்கும் விசேடமான முறையில் பங்காற்றுதல்.
- திருவழிபாட்டின்போது ஆயர்களுக்கும், குருக்களுக்கும் உதவி செய்தல்.
- தேவநற்கருணையைப் பகிர்ந்தளிப்பதற்கு உதவுதல்.
- திருமண சடங்கின் போது உதவுதல்.
- நற்செய்தியைப் போதித்தல்
- மரணத்தின் போது செபவழிபாடு நடாத்துதல்.
- பல்வேறு இரக்கப் பணிகளில் ஈடுபடுதல்.

19. நோயில்பூசுதல் அருளடையாளத்தை உத்தியோக பூர்வமாக வழங்கக்கூடிய அதிகாரத்தைப் பெற்றவர்கள் யார்?
- ஆயர்கள் - குருக்கள்

20. திருச்சபை சட்டத்தின்படி திருமணம் செய்வதற்கான சட்ட ரீதியான தடைகள் எவை?
- உரிய வயதெல்லை - இரத்த உறவு - மனித கொலை
- நித்திய வார்த்தைப்பாடு எடுத்திருத்தல் - திருமண உறவு
- வளர்ப்பு பிள்ளையோடு திருமணம் - கடத்திச் செல்லுதல்
- பாலுறுப்பில் குறைபாடு - திருநிலைப்படுத்தப்பட்டோர்
- நீண்ட கால பிணைப்பு
- கிறிஸ்தவரல்லாத ஒருவருடன் கிறிஸ்தவர் செய்யும் திருமணம்.

02). (அ) எசாயா இறைவாக்கினர், இறைவாக்குரைப்பதற்கு அழைக்கப்படும் போது ஆண்டவரின் மாட்சியும் மேன்மை நிலையும் பற்றி திருவிவிலிய ஆசிரியர் எவ்வாறு முன்வைக்கிறார்? (சில விடயங்களை எழுதுக)
- ஆண்டவரை சூழ்ந்திருந்த சேராபீன்கள் அவரது மேன்மை, மகிமைக்கு முகம் கொடுக்க முடியாது இரண்டு இறக்கைகளால் தம் முகத்தை மூடிக் கொண்டனர்.
- இரண்டு இறக்கைகளால் தம் கால்களை மூடி மறைத்தனர்.
- மற்ற இரண்டு இறக்கைகளால் பறந்தனர்.
- இறைவன் முன்னிலையில் அவர்கள் தமது பலவீனத்தை உணர்ந்து தமது உடலை மறைத்துக் கொண்டனர்.
- வாயில் நிலைகளின் அடித்தளங்கள் அசைந்தன.
- கோவில் முழுவதும் புகையால் நிறைந்தது.
- பூமியதிர்வும் புகையும் இறைவன் உயிருடன் எழுந்தருளியிருப்பதை அடையாளப்படுத்துகிறது.
- ஆண்டவரின் மேன்மைமிகு மாட்சிமை முன்னிலையில் தனது பாவ நிலையை எசாயா ஏற்றுக் கொள்ளுதல்.
- பலிப் பீடத்திலிருந்து எடுத்த நெருப்புப் பொறியினால் எசாயாவின் உதடுகளை இறைவன் தூய்மைப்படுத்துதல்.

ஆ) மறையாசிரியரின் இறைவாக்கு பணி என்ற தலைப்பில் கிறிஸ்தவ சஞ்சிகையொன்றிற்கு 120 சொற்களளவில் ஆக்கம் எழுதுக?
- அருளடையாளங்கள் மூலம் (திருமுழுக்கு, உறுதிப்பூசுதல்) மறையாசிரியர் அழைப்பு பெறுதல்.
- மறையாசிரியர் கிறிஸ்துவை பறைசாற்றுதல், இறைவார்த்தையை ஒவ்வொருவரிலும் வாழச் செய்தல்.
- யேசுவின் சீடரைப் போல் யேசுவைப் பற்றி அறிவிப்பதில் ஆர்வம்.
- மனிதனை முழு மனிதனாக வாழச் செய்வதற்கு - யேசுவின் அன்பு, மன்னிப்பு, இரக்கம் பற்றி சொல்லிக் கொடுத்தல்.
- இறைவாக்குப்பணி - மனிதன் மனிதனாக / புனிதனாக வாழ்வதற்கு பயிற்றுவித்தல். *(இத்தகைய கருத்தக்களில் அமைதல் வேண்டும்)*

03). அ) எபிரேய ஞானம் பல்வேறு இலக்கிய நடையில் முன்வைக்கப்பட்டுள்ளது. அவற்றில் ஐந்தைப் பெயரிடுக?
- பழமொழிகள் - அறிவுரைகள் - கூற்று
- உவமைகள் - கதைகள் - பாடல்கள்

ஆ) சபை உரையாளர் நூலில் காணப்படும் தர்மீக படிப்பினைகள் எவை?
- நிகழ்காலத்தில் தான் இருக்கும் நிலையில் இருந்து கொண்டே தனது வாழ்வு தொடர்பாக இறைவனுக்கு திட்டமொன்று இருப்பதை ஏற்றுக்கொண்டு புதிய வாழ்வொன்றை ஆரம்பிப்பது.
- பலவித காரணங்கள் தொடர்பாக குறிப்பிட்ட காலத்தை இறைவன் தீர்மானித்து அதை மனிதன் விளங்கிக் கொள்ளுதல்.
- இதுபோல் ஆராய்ந்து அறிவதன் மூலம் தீர்மானம் எடுக்க முடியும்.
- வேதனை, துன்பம் நிறைந்த காலத்திற்கு முகங்கொடுக்க நேர்ந்தாலும் வாழ்க்கையை மகிழ்ச்சியுடன் கழித்து இறைவனை மகிமைப்படுத்துவது எமது கடமையாகும். இது கட்டாயம் நடைபெற வேண்டும். இந்த எல்லாக் காரணங்களிலும் எவ்வித பெறுமதியும் இல்லையென கூறமுடியாது.


*(தொடரும்)*

**நம்பிக்கைக்குரிய நண்பர்கள் நலம் அளிக்கும் மருந்து போன்றவர்கள் (சீராக் 6:16)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விவிலிய குறுக்கெழுத்துப் போட்டி - 123

இம்மாத குறுக்கெழுத்துப் போட்டி (இல 123) இப்பத்திரிகையில் இடம் பெற்றிருக்கும் கட்டுரைகளான 02, 04, 08ம், பக்கங்களில் இருந்து தயாரிக்கப்பட்டுள்ளது.




### வினாக்கள்

இடமிருந்து வலம்:

01) உள்உணர்வுகளை வெளிக்கொணர்வது மட்டுமல்ல இதுவும் இறைவேண்டலாகும்.

06) மரியாவை நோக்கி எழுப்பும் மன்றாட்டுகளில் இதுவும் ஒன்று

07) ஆயர்கள், திருப்பணியாளர்களில் உலக மற்றும் ................ நலனில் கருத்தாய் இருக்க வேண்டும். (விடை குழம்பி உள்ளது)

08) அருள் மிகப் பெற்ற மரியே எனும் மன்றாட்டு வழியாக கன்னிமரியாவின் ............ திருஅவை வேண்டுகிறது.

09) கிறிஸ்துவின் ....................... ஆயரில் கண்டு மதித்தல்.

10) வைகாசி மாதம் வந்தால் நம் நினைவுக்கு வருவது அன்னை ..................... தான்.

11) திருப்பணியாளர்கள் யாருடைய அதிகாரத்தை ஆயரில் கண்டு மதித்தல் வேண்டும்.

வலமிருந்து இடம்:

03) இவர் வழியாகவே இறைவேண்டல் செய்கிறோம்

04) மரியா நமக்கு இறைவேண்டலின் வழியைக் காட்டுகிறார். அந்த வழி ஒரே ............... அவளுடைய மகனே.

07) மார்கழி 8ம் திகதி மரியன்னையின் .............. உற்பவ திருவிழா.

12) ..................... அன்னையாகிய தூய மரியாவின் திருவிழா தை 01ம் திகதியாகும்.

மேலிருந்து கீழ்:

01) திருஅவையின் முக்கிய கட்டளைகள் எத்தனை.

02) இயேசுக்கிறிஸ்துவோடு தொடர்புள்ள இறைவேண்டலின் உண்மைகளை விளக்குவது இவர்களினது கடமையாகும்.

06) திருப்பணியாளர்களின் பணிவாழ்வின் பண்புகளில் ஒன்று. (ல்) விடுபட்டுள்ளது.

09) .................(யாளின்) பரிந்துரையால் பலகோடி மக்கள் தம் வாழ்வில் நலன் பெறுகின்றனர்.

கீழிருந்து மேல்:

04) ........................... செய்யப் புனிதர்கள் நமக்கு எடுத்துக்காட்டாக உள்ளனர்.

05) கிறிஸ்தவ இறைவேண்டலின் ஊற்றில் இதுவுமொன்று.

பெயர்:-...................................................................

விலாசம் :-............................................................

...................................................................................

தொலைபேசி:-.........................................................

### போட்டி முடிவுகள் இல : 121

விடைகள்

வலமிருந்து இடம்:
2. இறையருள்
4. உறுதியானமனம்
5. கிறிஸ்துவின்ஒளியில்
11. கனிகளை

கீழிலிருந்து மேல்:
3. திருப்பணிநிலையின்
4. உரியவருக்கே
8. பிள்ளைக்குரிய
12. எலியா

இடமிருந்து வலம்:
1. ஆழ்நிலை
6. சமூகநீதி

மேலிருந்து கீழ்:
1. ஆன்மீகவாழ்வில்
2. இறை அழைத்தலைத்
6. சகோதரர்களா(க)
7. திருப்பாடல்க(ள்)
9. கடமைகளும்
10. நீதிமொழிகள்

பரிசுக்குரியவர்

* J. மெலனி, இல 135, லேடி மெனிங் டிறைவ், மட்டக்களப்பு.
* Y. ஞானப்பிரகாசம், வெளிச்சவீட்டுவீதி, பாலமீன்மடு, மட்டக்களப்பு.
* T.M.F. இருதயமேரி, பாடசாலை வீதி வாகரை.

குறிப்பு: விடைகளை இதே கூப்பனில் மாத்திரம் மிகவும் தெளிவாக எழுதி 10-06-2023 இற்கு முன் ஆசிரியர், குறுக்கெழுத்துப் போட்டி, வெட்டாப்பு, மறைக்கல்வி நடுநிலையம், வெபர் வீதி, மட்டக்களப்பு என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும். முழுமையாகப் பதில் அளிப்பவர்களில் மூவர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படுவர். மூவருக்கும் தலா 500 ரூபாய் பரிசாக வழங்கப்படும்.

## விவிலிய வினாவிடைப் போட்டி - 122

விடுதலைப்பயணம் நூல் (1–10 அதிகாரங்கள்)

நிபந்தனைகள்:
1. சரியான விடை ஒன்றின் கீழ் கோடிடுக.
2. வினாப்பத்திரத்திலே விடைகள் அனுப்புதல் வேண்டும்.
3. வேறாக எழுதப்படும் விடைகள் போட்டிக்குச் சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது.
4. சரியான விடைகளை எழுதி அனுப்புவோருக்கு குலுக்கல் மூலம் பரிசுகள் வழங்கப்படும்.
5. பரிசுகள் 500/= வீதம் தலா மூன்று பேருக்கு வழங்கப்படும்.
6. முடிவுத் திகதி - 10-06-2023
7. அனுப்ப வேண்டிய முகவரி :
   விவிலிய வினாவிடைப் போட்டி,
   "வெட்டாப்பு",
   மறைக்கல்வி நடுநிலையம்,
   வெபர் வீதி, மட்டக்களப்பு.

அனைத்துப் போட்டிகளுக்கும் அனுசரணை: திருமதி.ஜே.க. கனகசிவம், இலண்டன்.

### வினாக்கள்

01) கல்மழை இப்பகுதியில் பெய்யவில்லை.
அ) கோசேன் ஆ) எபிரோன் இ) மிதியான் ஈ) ஒரேபு

02) மேல் காற்றினால் வெட்டுக்கிழிகள் எங்கே வாரிக்கொண்டு விசி எறியப்பட்டது?
அ) செங்கடலில் ஆ) பீசோன் ஆற்றில்
இ) நைல் நதியில் ஈ) பார்வோனின் அரண்மனையில்

03) எகிப்தில் எத்தனை நாட்கள் இருள் மூடியிருந்தது?
அ) 6 நாள் ஆ) 7 நாள் இ) 3 நாள் ஈ) 2 நாள்

04) எபிரேய மருத்துவ பெண்களில் ஒருவர்?
அ) பூவா ஆ) ரூத் இ) ரெபேக்கா ஈ) லீயாள்

05) எபிரேய ஆண்மகவுகளை பார்வோன் எந்த நதியில் எறியும் படி கூறினார்?
அ) நைல் நதியில் ஆ) கங்கை நதியில்
இ) யமுனை நதியில் ஈ) செங்கடலில்

06) "கேர்சோமின்" தந்தையின் பெயர்?
அ) ஈசாக் ஆ) யாக்கோபு இ) யோசேப்பு ஈ) மோசே

07) இஸ்ரயேலின் தலைமகனின் பெயர்?
அ) பல்லூ ஆ) எட்சரோன் இ) ரூபன் ஈ) சிமியோன்

08) அம்ராம் வாழ்ந்த ஆண்டுகள்
அ) 110 ஆ) 130 இ) 120 ஈ) 137

09) கடவுள் மோசேயிடம் உனக்கு இவர் "வாக்கினனாக" இருப்பார் என யாரைக் குறித்துக் கூறினார்?
அ) ரூபன் ஆ) ஆரோன் இ) கர்மி ஈ) லிப்னி

10) பார்வோனிடம் மோசே பேச்சுவார்த்தை நடத்திய போது அவரது வயது?
அ) 80 ஆ) 90 இ) 70 ஈ) 100

11) யாக்கோபோடும் குடும்பங்களோடும் எகிப்துக்குச் சென்ற இஸ்ரயேலின் புதல்வர்கள் எத்தனை பேர்?
அ) 70 ஆ) 60 இ) 100 ஈ) 30

12) "எழுவேலின்" தந்தையின் பெயர்?
அ) ரூபன் ஆ) நப்தலி இ) கேர்சோன் ஈ) சிமியோன்

### போட்டி முடிவுகள்

விடைகள் இல : 120

1) 180
2) அல்லோன் - பாகூத்து
3. 400
4. மகனயிம்
5. 3ம் நாள்
6. ரூபன்
7. யாக்கோபு
8. பெத்துவேல்
9. ஏசா
10. சிபா
11. ஈசாக்
12. எபிமெலக்

### விவிலிய வினாவிடைப் போட்டி - 122

பெயர் :-..........................................................

...................................................................................

விலாசம் :-........................................................

...................................................................................

...................................................................................

தொலைபேசி :-..................................................

பரிசுக்குரியவர்

* வி. அனோக், இல 486/5, திருமலை வீதி, மட்டக்களப்பு.
* S. ஜெயமாலினி, இல 112, செபஸ்தியார்புரம், சொறிக்கல்முனை - 01.
* ப. எய்னன், இல 57, புதுமுகத்துவார வீதி, கல்லடி, மட்டக்களப்பு.

பங்கு பற்றியவர்களுக்கு பாராட்டுகளும் நன்றிகளும்.

வெட்டாப்பில் வெளிவரும் அனைத்துப் போட்டிகளுக்கான வெற்றியாளர்களின் பரிசில்களைப் பங்குத்தந்தை மூலம் பெற, வெட்டாப்பில் தங்கள் பெயர் உள்ள முடிவுப் பத்திரத்தை வெட்டி ஒரு மாதத்திற்குள் உங்கள் பங்குத்தந்தை மூலம் மட்டக்களப்பு, மறைக்கல்வி நடுநிலையத்திற்கு அனுப்பி வைக்கவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆயரக அறிவித்தல்

அருட்தந்தை கிறிஸ்தோபர் வின்செஸ்லோஸ்: ஆயரின் தனிப்பட்ட செயலாளர், மட்டக்களப்பு மறைமாவட்டம். (09-04-2023ல் இருந்து)





மட்டக்களப்பு மறைமாவட்ட மறைக்கல்வி நடுநிலைய இயக்குனர் அருட்பணி கிரோன் த லீமா அடிகளாரின் பிறந்த தினத்தினை முன்னிட்டு நிலையப் பணியாளர்கள், அருட்சகோதரிகள், மறைபோதகர்கள் இணைந்து 21-04-2023ம் திகதி அவரது அன்னையுடன் பிறந்த தினத்தினை சிறப்பித்தார்கள்.

# நீங்காத நினைவலைகள்

## விண்ணக வாழ்வில் 19 ஆண்டுகள்



இரக்கத்தின் ஆண்டவரே!
அன்பிற்கு இலக்கணமாய், பாசத்தின் உறைவிடமாய்,
இரக்கத்தின் ஊற்றாய், பொறுமையின் சின்னமாய்,
குடும்பத்தின் ஒளியாய்த் திகழ்ந்த
எம் அன்னைக்கு உமது பேரின்ப வீட்டில் முடிவில்லா
வாழ்வளித்தருள வேண்டும் என்று மன்றாடுகின்றோம்.

–பிரிவால் நினைந்துருகும் குடும்பத்தினர்.
- 4ம் குறுக்கு, திருச்செந்தூர், கல்லடி, மட்டக்களப்பு.

"ஞானமே மனிதர்க்கு உண்மையான நரைதிரை
குற்றமற்ற வாழ்க்கையே உண்மையான பழுத்த முதுமை" (சாஞா 4:9)

## விண்ணகப் பிறப்பின் ஓராண்டு நிறைவு



| மண்ணகப் பிறப்பு | விண்ணகப் பிறப்பு |
|---|---|
| 19 | 03 |
| 12 | 05 |
| 1931 | 2022 |

### அமரர். செபஸ்தியான் கவுரியல்

(சிரேஷ்ட பிரதிப்பணிப்பாளர் – நீர்ப்பாசனத் திணைக்களம், கணக்காளர் – மட்டக்களப்பு மாநகரசபை)

"வையத்துள் வாழ்வாங்கு வாழும் பாக்கியம் பெற்றீர்
வான்மழைக் கொப்பான நன்மைகள் பல செய்தீர்
அப்பழுக்கற்ற உமது சேவையை இன்றும்
போற்றுவோர் பலர் உளர். அன்னை மரியின் தாசரே,
இறுதிவரை செபமாலை, திருமறை ஓதியவரே
விண்ணகத்தில் உமக்கு உறைவிடம் உண்டு.
இது நிச்சயம்.
அக்களிக்கின்றோம் ஐயனே,
உம்மோடு வாழ்ந்த வாழ்வை எண்ணி

– மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
உற்றார், உறவினர்கள்.

T.P - 0771058965 -4B, டயஸ் லேன், மட்டக்களப்பு.

'I Have fought the good fight, I have finished the race, i have kept the faith' (2 Timothy 4:7)

## விண்ணக வாழ்வில் ஈராண்டு நினைவு



| அன்னை மடியில் | இறைவன் மடியில் |
|---|---|
| 04 | 15 |
| 02 | 05 |
| 1947 | 2021 |

### திரு. ஜோசப் மைக்கல் வோல்டர் கொறேரா

என்றும் வாழும் எல்லாம் வல்ல இறைவா,
சாவுக்குரிய எங்கள் உடலுக்கு உயிர் அளிப்பவர் நீரே என்பதால்
இறந்த எங்கள் இல்லத்தின் தந்தைக்காக நாங்கள் நம்பிக்கையுடன்
வேண்டுதல் புரிகின்றோம். உம் திருமகனோடு மகிமையில்
உயிர்த்தெழும்படி இவர் அவரோடு திருமுழுக்கில் புதைக்கப்பட்டார்.
நாங்கள் உருகும் உள்ளத்துடன் அவருக்காக செய்யும்
வேண்டுதல்களுக்குச் செவிசாய்த்தருளும். சாவுக்குரிய தடைகளிலிருந்து
எங்கள் தந்தையை விடுவித்து உயிர்த்தெழும் நாளில் இவர் உம்
திருமுன் வந்து சேரவும் உம் புனிதரோடு பேரின்ப மகிமையில் பங்கு
பெறவும் அருள்வீராக ஆமென்

என்றும் உம் நினைவுகளுடன் மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
33/6, முதலியார் வீதி, மட்டக்களப்பு.
தகவல்: குடும்பத்தினர்

இப்பிரசுரம் மட்டக்களப்பு மறைக்கல்வி நடுநிலையத்தால் மட். ஷெரோணி அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது. Type Setting by Catechetical Centre.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org